முகூர்த்தகாலகுழிசகுனமறிய

மண்டூகம், அரணை, பல்லி, சிலந்தி, புழுகு, நண்டு, தனம், செங்கல், பசுவின்கொம்பு, தான்யம், வெள்ளி, சிப்பி இவைகள் கண்டால்உத்தமம், ஓடு, சாம்பல், கரி. பல், மரத்தின்வேர், எறும்புகள் தெறினும், செல்லுகள் பரவியிருக்கினும், வண்டுகள் துளைக்கினும், நுாண், உடும்பு, பாம்பு, தேள், ஆலம், பூரான், எலி, உமி, விறகு காணில் சிறுமையும் துன்பமும் உண்டாம்.

வெள்ளைப்பூடு, மாமிசம், யானை, புரவி, முகூர்த்தஞ் செய்யுமிடத்துசமீபமாய் ஒருமுழ அகலநீள ஆழமாய்க்கெல்லி நடுவில்மண்

முட்டுவைத்து சுற்றிலும்கெல்லி மண்ணை வெளியில் எடுத்துமுட்டில் வாஸ்துபுருஷன் பூசைசெய்த மூன்றுகுடம் ஜலத்தைவலமாக விட்டு உதறி புஷ்பங்களைப்போடவும் அப்புஷ்பங்கள் மூன்றுசுற்று வலமாகவந்து கிழக்கு ஒதுங்கினதற்குபலன் சம்பத்துண்டாம் இடமாகசுற்றில்தீமையுண்டாம். ஷை புஷ்பம்ஈசான்யமூலையில் நின்றால் வாழ்வுண்டாம். கிழக்கில்லட்சுமிவிலாபமுண்டாம் அக்கினிமூலையில் கலசமும், தீமையுமுண்டாம் தெற்கில்பிணியும் வறுமையுமுண்டாம். கன்னிமூலையில் தனதான்யமுதலிய செல்வமுண்டாம் மேற்கில் நி... த்தகாரியம் கைகூடி இன்பத்துடன்வாழ்வார்கள்வாய்வுமூலயில் பொருள்நஷ்டமும், தெய்வக்குற்றமும் உண்டாம் வடதிசையில்-புத்திரசம்பத்தும் பொருட்சம்பத்தும் உண்டாம்

மூலைக்கால் நாட்டும்விதி

நல்லமுகூர்த்தத்தில் விநாயகரை பூசைசெய்து, பொன்னும் நவமணியும் பாலுங்குழியில்விட்டு முதல்தென்மேற் மூலைக்காலைநாட்டி தென்கீழ்மூலை வடகீழ்மூலை வடமேற்மூலைக்காலும் அடவுசேரநாட்டவும்.

மண்வெட்டிசகுனமறிய

மனை முகூர்த்தஞ்செய்யும்போது மண்வெட்டி மூனைமுறிந்திடினும், முனைபிரிந்திடினும் தீதாகும்

வேறுமண்வெட்டி முழக்கயிற்றின்சகுனம்

மனைக்கோலுவதற்குக் கொண்டுவந்தமண்வெட்டி முனையானது முறியினும், முனையானது பறிந்திடினும், கயிறு அருந்திடினும் ஆகாது. அதேனெனில் எஜமானுக்கு வராதாபத்தும், மனக்கிலேசமும் அனுபவிப்பதுமன்றி, நீடூழிகாலம் துன்பத்தை யனுபவித்து எமபதிக்குப்பாத்திரனுவான் ஆகையால் அச்தமனை ஆகாது.

நூலணியும்விதி,

தேவர்க்கு பட்டுநூல் முப்புரியாகவும், பிராமணருக்கு தெர்ப்பைமுப்புரியாகவும், க்ஷத்திரியருக்கு ஆலம்விழுது கதம்பைநார்முப்புரியாகவும், வைசியருக்கு பருத்திநூல் இருபுரியாகவும், சூத்திரர்களுக்கு பனைநார்-ஆத்திநார் இருபுரியாகவும் கொள்வது விதியாகும் நான்குவமிசத்தாருக்கும் முப்புரியாகிய பருத்திநூல் கொள்வதும் விதியாகும்,

வேறு நூற்கயிற்றின் சகுனம்

பட்டுநூல்-தர்ப்பை-ஆலம் விழுது-பனையின்நார் இவைகள் தேவர் முதல் நான்குஜாதிக்கும் தெளிவாகச் சொல்வோம் அதாவது, தேவர்களுக்குப் பட்டுநூலால் முப்புரிக்கயிறு, பிராமணர்களுக்குத் தர்ப்பையினுல் முப்புரிக்கயிறு, இராஜர்களுக்கு ஆலம்விழுதால் முப்புரிக்கயிறு, வைசியர்களுக்குப் பருத்திநூலால் இரண்டுபுரியையுடைய கயிறு, சூத்திரர்களுக்குப் பனைநாரினுல் இரண்டுபுரி கயிறுமெனவறிக.

மூலைநீளமறிய.

பதினொருவிரல்முதல் இருபத்தாறுவிரல்வரையில்இசைந்தபடி கொண்டு முதலில் தென்மேற்குமுதல் தெற்குகடாவி இடமாகமற்ற மூலைக்கடாவவும். மூலைகிழியில் அசுபமுண்டாம்

வேறுமூலைநீளம் மூலைக்கயிறுகால்

மூலைக்குநீளம் கக-விரற்றொடங்கி ஒருவிரல்ஏறிட்டுஇருபத்து நான்கு விரலளவுங்கொள்வது மூலைகடாவும்போது வாஸ்துவின்வயிற்றிற்கெல்லி பின்பு தென்மேற் மூலையில் கடாவி தென்கீழ் வடகீழ் வடமேல்மூலைகளிற் கடாவி விடவும்,

மனைமுகூர்த்தஞ்செய்யும்போது

மரியாதைசெய்வதறிய.

மனைமுகூர்த்தஞ் செய்யும்போது சொர்னதானம் வஸ்திரதானஞ்செய்து பெரியவாளுக்கெல்லாம் தாம்பூலமுதலிய மரியாதைகள்செய்து மனைகோலவேண்டும்.

தேங்காய்ச்சகுனமறிய

முகூர்த்தஞ் செய்யுங்காலத்தில் தேங்காயுடைக்கில்முடிபெருத்து அடிசிறுத்து வட்டமாயுடையில் லட்சுமிவிலாசமுண்டு மூன்று பங்குசிரசிலும், ஒருபங்கு அடியிலும் உடைந்தால் சந்தோஷமுண்டாம், ஜெயமுண்டாம். ாி-அல்லது, உ-ஆகில் மாறுதசெல்வ முண்டாம் உடைந்து நாம்புபிடித்தால்வாழ்வுண்டாகும். கடுகளவுபிரமாணம்சிதறி உள்ளேவிழுந்தால் ரத்தினஞ்சேரும். நடுவிற்பிளந்தால் சண்டையுண்டாம். கமெத்தியில் உடைந்தால் விசேஷநன்மை சு ஃ-ஆக உடைந்தால் விசேஷதுன்பம் கண்கள்தெரித்தால் மரணமுண்டாம் ஓடுவிட்டால் வறுமையுண்டாம் ஓடுசுங்கிட பிணியுண்டாம் அழுகலானுல் குற்றம் அதுமனஸ்தாபத்தை விளைவிக்கும்,

தெற்குமுகம் மேற்குமுகம் கட்டினவீடு விசாலத்துக்கு கமலாகரமென்னப்படும் இதன்பலன் லட்சுமிகரம் மேற்கு-வடக்கு கட்டினவீடு விசாலத்துக்கு சுவர்னபலமென்னப்படும். இதின்பலன் சோரபயம், பீடையுண்டாம். வடக்கு-கிழக்கு கட்டினவீடு விசாலத்துக்குபுஷ்தகமுஷ்டிகமென்ப்படும் இதின்பலன் சோரபயமும். விஷபயமுமாகும். தெற்கு-மேற்கு-வடக்கு கட்டினவீட்டுக்கு கிழக்கில் வாசக்கால்வைத்தால் புத்திரமுஷ்டிகமென்னப்படும். இதன்பலன் பயம் வடக்கு-கிழக்கு-தெற்கு கட்டினவீட்டுக்கு மேற்கில் வாசக்கால்வைத்தால் அதிசயமென்னப்படும் இதின்பலன் ஹானி கிழக்கு-மேற்கு தெற்கு-வடக்கு கட்டினவீட்டுக்கு வடகில் வாசக்கால் வைத்தால் நலசுகமுண்டாகும். மேற்கு-கிழக்கு-வடக்கு இந்தமூன்றுபக்கத்திலும் வாசக்காலிருந்தால் கலியாணபதமென்னப்படும் இதில்சம்பத்துண்டாம் கிழக்கு-தெற்கு-மேமற்குவடக்கு இந்தநாலு பக்கத்திலும் வீடுகட்டியிருந்தால் அதுசதுர்ச்சாலை என்னப்படும் இதின்பலன் உத்தமம்.

மனைதோஷமறிய

ஆலயம், சன்னிதிமையம், பசாசுவாசமானயிடம். துர்க்கை தேவதையின் சன்னிதி, தேவதைவலக்கண் நேராயுள்ளயிடம், குளம் வாய்க்கால், ஆறுதாழ்ந்தயிடம், தெருகோடி, மூலை இவைகள்கூடாவாம் வடக்கு கிழக்கு தாழ்ந்திடில் இன்பமுண்டாம் தெற்குமேற்கு தாழ்ந்திடில் துன்பமுண்டாம்.

மனைக்கோல ஆகாநாள்

விருத்தம்

சன்னுளினு மனைகோலினு நவனுர்தமிராசி
முன்னுகுதல் வலமாகுதல் முளரித்திரு வுரையும்
பின்னுகுத லிடமாகுதல் பேணிமனை கோலில்
பொன்னுகுதல் பொருளாகுத லுயிராகுதல் போமே:

மனைகோல தூரமறிய

மனைகோலவேண்டுமானால் ஆற்றங்கரைக்கு ஜாதிஅடி ௫0-க்கு மேலும், ஊரணிக்குஜாதிஅடி ௨௫-க்குமேலும், கிணற்றுக்கு ஜாதி அடி ௧௭௨-க்குமேலும் இதுகளுக்கு அப்பால் மனைபோடசுகம், மேற்சொல்லியதுகைக்கு குறையில் துன்பமுண்டாம்.

மனைகோல மாதமறிய

சித்திரை-வைகாசி-ஆடி-ஆவணி -ஐப்பசி-கார்த்திகை-தை-மாசி இந்தமாதமும் மனைகோலநன்றும்.

கிரகப்பிரவேசமறிய

கிரகப்பிரவேசகாலத்தில்மேற்கு-தெற்கு- அக்கினிமூலை- வாயு மூலை இந்ததிக்குகளில் பிரவேசித்தால் செல்வமிழந்து உயிரிழப்பார்கள். அதற்குத்தானிருக்கப்பட்ட இடத்திலிருந்துதகுதியான இடத்தில் ர-எ-அல்லது,கூ-நாள் குடித்தனமிருந்து அவ்விடத்திலிருந்தபடியே புதிதாய்ப்போகவேண்டிய இடமானது வடக்கு-கிழக்கு-ஈசான்னியம் இந்ததிக்குகளுக்குப் பிரவேசித்தால் விசேஷ நன்மையுண்டாம்.

இதுவும் கிரகப்பிரவேச விதிகளறிய

நீர்க்குடம், பால்,பழம், செம்பு,பொன், புஷ்பம்,சந்தனம், புனுகு,சோமன், மஞ்சள், குங்குமம் இதுகளும் சுமங்கிலிகள் கூட மங்களவாத்தியமுழக்க கிரகப்பிரவேசம்செய்து, நவக்கிரகஹோமம் செய்து பூரிகொடுத்து,தாம்பூலமளித்து போஜனஞ்செய்யவும், அல்லது, அறுகம்புல் பசுக்களுக்குகொடுத்துத் தங்களால் இயன்றதகூலியும் கொடுத்து கிரகப்பிரவேசம் பண்ணவேண்டும்.இதுவிதியாகும்.

வேறு கிரகப்பிரவேசம்

ஆனி-ஆடி-புரட்டாசி-மார்கழி-மாசி-பங்குனிமாதங்களும், ஞாயிறு-செவ்வாய்-வியாழம்-அஸ்வனி-மிருகசீரிடம்- புனர்பூசம் - ஆயில்யம்-சித்திரை-சோதி- மூன்றுநட்சத்திரங்கள்- அனுஷம்- திருவோணம் தவிர மற்றநட்சத்திரங்களும் விருச்சிகம்கும்பம் இருத்தையும் ஆகாவாம் அஷ்டமசுத்தமுள்ள லக்கினம் உத்தமம்.

இருமனை யாகாததற்குவிதி.

ஒருவீட்டுக்கட்டத்துடன் மற்றொருவீட்டையும் சேர்த்துகட்டவேண்டுமானால் இரண்டையும் இடித்து காலிசெய்துமனையைக் கொத்தி நவதானியங்களை அதில்விரைத்து பயிர்செய்து பயிரானவுடன் பசுக்களைவிட்டு மேய்த்து மூன்றுநாள்பசுக்களை அதில்வசிக்கச்செய்து நவக்கிரகவாஸ்து ஹோமம்செய்து மனைகோல்பவர்களுக்கு சகலதோஷமும் நிவர்த்தியாகி சகலசவுக்கியமும் விசேஷநன்

மையும் உண்டாம். இப்படிக்குச் செய்யாவிட்டால்மனக்கிலேசமும் துன்பமும் உண்டாம்.

மனை முகூர்த்தம்

சித்திரை-வைகாசி-ஆடி-ஆவணி-ஐப்பசி-கார்த்திகை-தைமாசி இம்மாதங்களில் கிழக்குமுதல் கிரமமாக மனைமுகூர்த்தம் செய்யலாம். ஆனி-புரட்டாசி-மார்கழி-பங்குனி இந்தராசிகளில்சூரியனிருக்கும்போது, கிரகப்பிரவேசம், கிரகாரம்பம்செய்யில் கர்த்தாமரணம். ரோகிணி-திருவோணம்-அனுஷம்-பூசம்-உத்திரம்- உத்திராடம்-உத்திரட்டாதி-ரேவதி-மிருகசீரிடம்- புனர்பூசம்- அஸ்தம்- இவைகள் உத்தமம். சித்திரை-அவிட்டம்-மூலம்-சுவாதி-சதயம் இவைகள் மத்திமம். மேற்கூறிய நட்சத்திரங்கள் நீங்கலாக மற்றவை அதமம்.

உத்தமவாரங்கள்-

சோமவாரம்-புதவாரம்-குருவாரம்-சுக்கிரவாரம்-உத்தமம்சனிவாரம்-ஆதிவாரம் மத்திமம்.மங்களவாரம் அதமம்.

பூர்வாஷ்டமியும், இருத்தையும் உவாவும் ஆகாது.மற்றபாகங்களிலே அஷ்டமசுத்தியா யிருக்கவேண்டும்.ஸ்திரராசி உபயராசி உத்தமம்.சரராசிகூடாது தீமையுண்டு.

மனைமுகூர்த்தஞ் செய்யுங்காலத்தில் எஜமானுடைய ராசிக்கு கேந்திரங்களாகிய லக்கனம்.நான்காமிடம் ஏழாமிடம் பத்தாமிடம் இந்தஇடங்களில் குரு, சுக்கிரன், புதன்நிற்க, ஆறாமிடத்தில் சூரியன்நிற்க, மூன்றாமிடத்தில் சனி செவ்வாய்நிற்க மனைமுகூர்த்தம் செய்ய க00 வருஷம் சுபமாக விளங்கிவரும் அல்லது லக்கனம்-எ-க0ல் சுக்கிரன், குரு, சந்திரன்நிற்க முகூர்த்தஞ்செய்யில் ௬00 வருஷம்சகல பாக்கியங்களோடும் வாழ்வார் அல்லது லக்கினம் ௬-க0ல்சந்திரன் புதன், குருநிற்க முகூர்த்தம்செய்ய கூ00 வருஷம் நிறைந்த சம்பத்துடன் இருக்கும் அல்லது பத்தில்-நாலில் சந்திரன், குருவும், பதினொன்றில் சனியும், சூரியனும் இருக்கச்செய்யில் அ0 வருஷம் விளங்கி இருக்கும் அல்லது லக்கினத்திற் குருவும், பதினொன்றில்சூரியன்புதன் சுக்கிரனும் இருக்கச்செய்யில் க000 வருஷம் விளங்கும். அல்லது லக்கினத்திற் ௬-ல் க0-ல்சந்திரன், புதன், குருநிற்கச்செய்யில் க00 வருஷம் விளங்கும் அல்லதுகேந்திரமாகிய லக்கினம் ௬-எ-க0-ல் குரு சுக்கிரன் லக்கனாதிபதி இல்லாதிருக்க மனைகள் செய்யில் புத்திரநாசம் அல்லது லக்கனாதிபதி திரிகோணத்தில் கட்பு உச்சம் அல்லது கே

ந்திரத்தில் இருக்கச்செய்யில் வாழ்வுண்டாகும்சுபக்கிரகம்நோக்கில் ௧00-வயது விளங்கும். பாபக்கிரகம்நோக்கில் ஆயுசுகுறையும்.

பேழைவைக்க,

கிரகப்பிரவேசகாலத்தில் கட்டியகிரகத்தில் ஈசான்யபாகத்தில்சுத்தஞ்செய்து நண்டுவளைமண், யானைக்கொம்புமண், ரிஷபத்தின் கொம்பின்மண், புத்துமண், குளத்துமண் இவ்வைந்து மண்ணையும் சமமாகக்கூட்டி சிறியபெட்டிபோல்செய்து ஷை மண்ணால் ஷை பலகைசெய்து அடிப்பேழையில் ௯-பள்ளம்செய்து ௯-விதரத்தினங்களை ஷை பள்ளத்தில்வைத்து மேற்பலகையால்மூடி தங்கத்தகட்டில் வாஸ்துஎந்திரம்போட்டு வாஸ்துபூசையும் நவக்கிரகபூசையுஞ்செய்து ஷை எந்திரத்தில் பழம்பாசியினால் சுத்தி ஷை ஈசான்ய மூலையில்வைத்து அந்த இடத்தில் ஒரு மண்டலம் பூசை செய்துக்கொண்டு வரவேண்டும்.

தாய்ச்சுவர்நிர்ணயம்

மனைக்குத் தாய்ச்சுவரைச்சேர்த்தே ஆயக்கணக்கிடவேண்டும் ஓர்மனைக்கு இரண்டுசுவர் இருக்குமாயின் அவ்விரண்டையுமேகணக்கிற்சேர்க்கவேண்டும். மற்றும் வீட்டுக்கட்டடத்திற் தெருப்புறத்திலும், பின்புறத்திலும் அமையுர்தாவாரங்களைக் கணக்கிற்சேர்ப்பதற்கு விதியில்லை. ஆயினும் ஒருவாறுசேர்ப்பதாயின் அஃதுமத்திமபட்சமென்பதாம்.

வீட்டின்வாயில் நிர்ணயம்

கிழக்குமுகமாகிய மனைக்கு அம்மனையின் ஈசானியமுதல் ஆக்கினேயவரையிலும் தெற்குமுகமாகிய மனைக்கு அம்மனையின் ஆக்கினேயமுதல் நிருதிமூலைவரையிலும் மேற்குமுகமாகியமனைக்கு அம்மனையின் நிருதிமூலைமுதல் வாயுமூலைவரையிலும் வடக்குமுகமாகியமனைக்கு அம்மனையின் வாயுமூலைமுதல் ஈசான்யம் வரையிலும கணக்கிடவேண்டுமென்பதாம்.

இதுவுமது

முன்கூறியபடி மனையைச்சூரியன்முதல் கேதுவரையிற்முறையே ஒன்பதுபாகமாக்கவேண்டும் அப்படியேசெய்யும் பாகங்களுள் குருபுதன்பாகமாயின் இலட்சுமிகடாட்சமுண்டாகும். செவ்வாய்பாதமாயின் அவ்வில்லாளருக்கு வியாச்சியங்களுண்டாய்கடன்மிகு

து அம்மனை பராதீனமாய்ப்போய்விடும். சூரியபாகமாயின் அதில் வாழ்கின்றவர்களுக்கு ஆதாயங் குறைந்துபோவதுமன்றித் தாய்க் கும்பிள்ளைகளுக்கும் மனக்கிலேசமும் கலகமும்உண்டாகும், சுக்கிர பாகமாயின் அற்பபலனும் மிகுந்தபொருள்விரையமும் வியாச்கிய முமுண்டாம். சந்திரபாகமாயின் விருத்தியும் க்ஷீணமும் அடுத்தடு த்துண்டாம். சனிபாகமாயின் பொருள்விரையமும் வியாச்சியமும் உண்டாம். இராகு கேதுக்கள்பாகமாயின் அம்மனையார்க்குஞ்சொ ந்தமாகாமலே அடிக்கடி ஒர்கைவிட்டோர்கை மாறிக்கொண்டேயி ருக்கும் ஆகையாலிவ்வொன்பது கிரகங்களுக்குள் புதன்-குரு இவ் விரண்டுபாகங்களே உத்தமம். மற்றும் இவ்விரண்டின் தனித்தனி யாயினும் அல்லது இரண்டுங்கலந்தாயினும் இருக்கலாம். மற்றவெழு பாகங்களையும் மனைக்கு உதவாதவையென்று நீக்கத்தக்கதே விதி யென்பதாம்.

வாயிலின் அளவுவிதி.

மனைவாசற்படிக்கு வேங்கைஅல்லதுதேக்கு இம்மரங்கள்சிரே ஷ்டம் மற்றமரங்களை நீக்கவேண்டியதே, மற்றும் அவ்வாயிலுக்கு அமைக்கப்படுகின்ற உயர அளவில் ஒன்பதில் ஐந்துகூறு அகலம்அ மைக்கப்படவேண்டும். அவ்விதிப்படி யிருக்கின்ற வாயிலிற்றான் மஹா இலக்குமி நுழைவாளென்பதாம்

இதுவுமது.

வாயிற்படிகளுக்கு அமைக்கப்பட்ட மேற்சூரியும் பக்கங்களில் லைக்கப்பட்ட சட்டங்களும் ஒர்ஜாதிமரமாகவே யிருக்வேண்டுமன் றியும், அவ்வாயிற்படிகளுக்கு அமைக்கப்பட்ட கதவுகளுக்கு ஒற்றைக்கணக்காயப் பலகைகள் சேர்த்துக் கூட்டவேண்டுமென் பதாம்.

வீட்டில் நுழையும்போது

தோற்றக்கூடாதவைகளாவன

வீட்டின் செல்லும்பொழுது எதிர்பார்வையில் தூலங்களின் கு த்தாயினும், முத்தத்தின் மூலைக்குத்தாயினும் தோன்றுமாயின் அம் மனையின் கர்த்தாவுக்குத் தோஷமுண்டாகும். அன்றியும்.அம்மனை யில் அடுத்தடுத்து உயிர்ச்சேதங்களுண்டாகும் மேலும்தெருவாயற் படிக்குநேராய் மூடப்பட்டகட்டைச்சவரிருந்தாலும் அவ்வீட்டில் வசிப்பவர்களுக்கு கஷ்டமுண்டாகு மெனவறியவும்.

வீட்டிலிருக்கவேண்டிய அங்கணவிதி

வீட்டின் தலைவாயற்படியின் அளவுக்கு உள்வாயிற்படிகள் உயர்ந்திருக்குமாயின் வெற்றி நலமுண்டாம் விதிவிலக்கா யிருக்குமே யானின்வரும் நற்பலன்நீக்கும்.

இதுவுமது

அன்றியும் வீட்டின்முன்பார்வை அங்கணங்கள் க - ரு - ஆயின் உத்தமம். ௬-எ-கக-ஆயின்மத்தியம் மற்றவை அதமமெனக்கொள்ளவேண்டுமென்பதாம்.

இதுவுமது.

வீட்டின் உ-௪-௬-அ-க0-கஉ-க௪-க௬ இவ்வித அங்கணங்களாயிருப்பது அதமம். அன்றியும் வீட்டின்மேற்சாயை நாலுபக்கமும் சம உயரமாயும் தாழ்வாரம்நாலும் சமஅகலமாகவும் இருப்பதுநலமென்பதாம்.

வீட்டின் அறைகளிருக்கவேண்டிய விதி

வீட்டினுள்ளே அறைகள் தெருநடையுஞ்சேர்த்து ரு-எ-௯-கக இவைகளுககொத்திருக்கின் நலமாம க-உ-௬-௪-௬-அ-க0-கஉ-க௪-க௫-கக இச்சங்கியையுடைய அறைகள் ஆகாவென்பதாம

இதுவுமது

மனைக்கு மூலங்களாயினும் நல்லதகழிகளாயினும்மேற்கூறை யெத்தித் தாழ்வாரமாத்திரம் தளம்போடுவதாயின் தீமையுண்டாம் மற்றும்வீட்டின் நடுவிலிருக்கின்ற முற்றம்அல்லது வாயிலை கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு இவ்விரளவும் அளந்து குழியாக்கி அச்சங்கியை எட்டிலேபங்கிட சேடம் எட்டுக்குள் க உ-மிகுமாயின் சர்வ தோஷம்நிவாரணம் மற்றசங்கியைகள் தீமையையுண்டாக்கும் மற்றும் வீட்டின்உட்புறத்தில் எங்காயினும் ஒறறைமூலங்களிருக்குமாயின் மனக்கலக்கமுண்டாகும். மேலும்வீட்டினுள்எதிருக்கெதிராய் ஒன்றையொன்று பார்க்கும்படியாக இரட்டைக்கூடங்கள் அமைக்கப்படாது அப்படியிருக்குமாயின் அவவில்லில் வாழ்பவர்களுக்கு தோஷங்கள் உண்டாக்குமென்பதாம்.

வீட்டை ஈசானியந்திருப்புவதும் வாயல்கள் நேராயிருக்க வேண்டியதும்.

வீட்டை யீசான்யந் திருப்பவேண்டுமெனின் ஒரங்குலத்துக்கு மேற்படாமல் திருப்புவது மங்களகரம் மற்றும்வீட்டின் கூடத்து மையமும் வாசலின்நடுமையமும் ஒத்திருக்குமாயின் நிராட்சேபமாயிருக்கும். மேலும் தெருவாயற்படிக்கு நேராகப் புறக்கடைவரையில் வாயல்கள் தடையில்லாமல் இருக்கின் யாதொரு குற்றமுமில்லை என்பதாம்.

வீட்டுள் இத்தனைகட்டுகளிருக்க வேண்டுமென்பது

ஓர்வீட்டில் அடுக்கடுக்காய் மூன்றிதொட்டி கட்டுகளமைக்கப்படாது, அப்படி இருக்குமாயின், அம்மனையில்வாழ்கின்ற உயிர்களுக்குச்சேதம் உண்டாம் என்பதுநிச்சயம். ஆனால் முதற்கட்டுக்கடுத்தாய்போல் இரண்டாவதுகட்டு ஒன்றுமாத்திரம் அமைதது்கொள்வது நன்மை. ஆயினும் அவ்விரணடாங்கட்டுக்கு ஆயம்வேறேயன்றிக் முதற்கட்டின் ஆயத்தில் சேரமாட்டாதென்பதாம்.

பசுத்தொழுவம் மேல்மாடம் மேற்படி மாடம் ஏறுகிறபடி ஜலதாரை இவைகள் அமைக்கவேண்டியவிதி,

பசுத்தொழுவம் வீட்டில் அமைக்கவேண்டுமெனின் அவ்வீட்டின் கட்டடத்துச் சம்பந்தப்படாமல் புறம்பாய் அமைக்கவேண்டும் மற்றும்வீடுகளில் மேல்மாளிகை கட்டவேண்டுமெனின் வடபுறத்திலும், கீழ்புறத்திலும் கட்டுவதே நியமமென்றும் அப்படிக்கட்டினால் சுகமுண்டாமென்றும், இதுநீங்கலாக மற்றமேற்கு தெற்காகிய இவ்விரண்டுதிசைகளுள் மேறபுறத்தில்கட்டுவது மத்திமமென்றும், தென்புறத்தில்கட்டினால் தீங்கைத்தருமென்றும். மற்றும் அம்மேன்மாடங்களேறுவதற்குப் படிகள் வடக்குஅல்லதுகிழக்கு இத்திக்குகளைநோக்கி யேறுவது உத்தமமென்றும், மற்றதிசைகள் அதமமென்றும், மற்றும் வீட்டின்ஜலம் போகின்றதாரை வடக்குகிழக்கு ஈசான்யம் இத்திசைகளிற் செல்லவிடுவது உத்தமமென்றும், மேற்கு-தெற்கு-நிருதிமூலை-வாயுமூலைமத்திபமென்றும், ஆக்கினேயமூலை மிகக்கொடியதென்றும், முன்னோர்கள் உரைத்திருக்கின்றன ரென்பதாம்.

வீட்டின்சுவர் அளவுவிதி

வீடுகளுக்குப் பட்டரைமட்டம் ௯ அடி உயரத்திற்குக் குறைவில்லாமல் வைக்கவேண்டும். மற்றும் தாய்ச்சுவர்முதல் உட்புறம் அமையுஞ் சுவர்கள் யாவும் ஒன்றரை அடி அகலத்துக்குக் குறைவில்லாமல் இருந்து ஆயப்பொருத்தங்கள் யாவும் பொருந்தியவீடுகளில் அஷ்டலட்சுமிகளும்வந்து பொருந்துவரென்பதாம்,

வீட்டுள்கூடம் தாழ்வாரங்கள் இவைகளுக்கு, அகலமும் நீட்சியும் அமைக்க வேண்டிய விதி,

வீடுகளுக்குத் தாழ்வாரம் அஞ்சரையடிக்குக் குறையாமல் மேற்பட்டே அமைக்கவேண்டும். மற்றும் வீட்டின் அடிமட்டத்திற்குப் புறக்கடை தாழ்ந்திருக்கவேண்டும். அன்றியும் தூலம்வைத்து கட்டும்படியான வீடுகளுக்கு உள்ளகலம் அடி எட்டும், அங்குலம் ஒன்றும், அல்லது இரண்டாயினுமிருக்கின் நன்மை, மற்றும் வீடுகளில் அமையுங்கூடங்களுக்கு அடி ௧௨-௧௪-௨௨-௨௪ இக்கணக்குகளுக்கொத்தநீட்சி அமையச்செய்வது உத்தமமாமென்பதாம்.

வாசல்வாஸ்துஸ்தானம்,

வீட்டைச்சேர்ந்த வாசல் அல்லது முற்றமானது கிழக்குமேற்களவுக்கு வடக்குத் தெற்களவு குறைந்திருக்கின் சூரியவாஸ்துவென்றும், கிழக்குமேற்களவுக்கு வடக்குத்தெற்கு நீண்டிருக்கின் சந்திரவாஸ்துவென்றும். இவ்விரண்டினுள் சூரியவாஸ்துமுற்றம் நலமும், சந்திரவாஸ்து முற்றம்தீமையுந்தரும் ஆகையால் கிழக்கு, மேற்கு, சற்றாயினும் நீண்டிருக்கச்செய்தால் பாக்கியத்தை யுண்டாக்குமென்பதாம்.

கூபவிதியும் பசுக்களைக்கட்டும் விதியும்,

வீடுகளுள் வருணபாகத்திற்றானே கிணறுகள்அமையவேண்டியது. பொதுவிதியாயினும் வடக்குமுகம் கிழக்குமுகமாயிருக்கின்ற வீட்டில் நிருதிமூலையிலும், தெற்குமுகம் மேற்குமுகமான வீட்டில் ஈசானியத்தில் இருப்பது ஒருபட்சம் மற்றும் வாயுமூலையிலும் தெற்கிலும் கிணறுகளிருப்பது மத்திமபட்சம் எந்தமுகமாயிருக்கின்ற வீடுகளிலேயும். அக்கினிமூலையிருப்பது அதமம். அதனால் கொடியதீங்குண்டாம் மற்றும் காட்டுக்குப்போய் மேயத்தகுரு

கின்ற பசு எருது முதலியவைகளைத் தொழுவத்தில் மேற்காயினும் அல்லது வடக்காயினும் பார்க்கக்கட்ட வேண்டுமென்பதாம்.

மனையின்மேல் தாக்கக்கூடாத சாயைகளும், மற்றும் உண்டாகும் ஆலயநோக்குகளின் பலனும்

வீடுகளின்மீது ஆலயங்களினது சிகரம் அல்லது ஸ்தூபியின் நிழல்தாக்குமாயின், அவ்வில்லம் க்ஷீணகதியையடையும். அன்றியும், விஷ்ணுஆலயத்துப்பின்னும் சிவன் விக்கினேஸ்வரர் இவ்வாலயங்களுக்கு முன்னும் இருக்கின்றவீடுகளும் க்ஷீணகதியை அடையுமென்பதாம்,

கோயில் கோபுரம் கூடம்மனை அளவு முழக்கோல்.

பூமி-மலை-மனை-சாலை-மாளிகை இவைகளை கிஷ்க்குவின் விரலாலளப்பது. கோபுர-கூடம். இவைகளை அறுவிரல்முழத் தாலளப்பது. இதில்பனிரண்டுவிரலுக்கு விதஸ்த்தியென்று பெயராம். இதிலிரட்டி இருபத்துநால் விரல்கொண்டது கிஷ்க்குவென்பதாம்.

நட்சத்திர பலன்.

அசுவனி-மிருகசிரம்-உரோகணி - பூசம்-அஸ்தம்-உத்திராடம்-திருவோணம்-அவிட்டம்-சதயம், இந்த, கக-ம் உத்தமம்.

திருவாதிரை-புனர்பூசம்-உத்திரம்-கேட்டை - உத்திரட்டாதி ரேவதி இந்த, சு-ம் மத்திமம்.

பரணி-கார்த்திகை-ஆயிலியம்-மகம்-பூரம்-பூரட்டாதி - சுவாதி பூராடம்-விசாகம்-மூலம், இந்த, க0-ம் அதமம்.

நட்சத்திரத்திற்கும்யோகத்திற்கும் அமிசையறிய.

அசுவனிக்கு	அரிஷ்டணம்
ரோகணிக்கு	பிரீதி
புனர்பூசத்துக்கு	வியதிபாதம்
மகத்துக்கு	சோபனம்
அஸ்தத்திற்கு	சிவம்
விசாகத்துக்கு	திருதி
மூலத்திற்கு	சுபம்
திருவோணத்திற்கு	விருத்தி
பூரட்டாதிக்கு	மாகேந்திரம்.

இந்த, கூ-நட்சத்திர யோகத்துக்கும்தனம்—ச

பரணிக்கு	விஷ்கம்பம்
மிருகசீரிடத்துக்கு	சித்தி
பூசத்துக்கு	சௌபாக்கியம்
பூரத்துக்கு	பரீகம்
சித்திரைக்கு	சுகர்மம்
அனுஷத்துக்கு	சாத்தியம்
பூராட்டாதிக்கு	கண்டம்
அவிட்டத்துக்கு	சுப்பிரமம்
உத்திரட்டாதிக்கு	வியாக்காதம்

இந்த, ௯-நட்சத்திர யோகத்துக்கும் தனம்—௩.

கார்த்திகைக்கு	வச்சிரம்
திருவாதிரைக்கு	ஆயுஷ்மான்
ஆயிலியத்திற்கு	வரீயான்
உத்திரத்திற்கு	அதிகண்டம்
சுவாதிக்கு	சித்தம்
கேட்டைக்கு	சூலம்
உத்திராடத்துக்கு	பிராமியம்
சதயத்திற்கு	துருவம்
ரேவதிக்கு	வைதிருதி

இந்த, ௯-நட்சத்திர யோகத்துக்கும் தனம்—௧௨

நட்சத்திரத்திற்கும் யோகத்திற்கும் தார பலன்.

அசுவனிக்கு	பேசிதாரம்
ரோகணிக்கு	சரிதாரம்
புனர்பூசத்துக்கு	பேசிதாரம்
மகத்துக்கு	சரிதாரம்
அஸ்தத்துக்கு	பேசிதாரம்
விசாகத்துக்கு	சரிதாரம்
மூலத்துக்கு	பேசிதாரம்
திருவோணத்துக்கு	சரிதாரம்
பூரட்டாதிக்கு	பேசிதாரம்
பரணிக்கு	சரிதாரம்
மிருகசீரிடத்துக்கு	பேசிதாரம்
பூசத்துக்கு	சரிதாரம்
பூரத்துக்கு	பேசிதாரம்
சித்திரைக்கு	சரிதாரம்
அனுஷத்துக்கு	பேசிதாரம்
பூராடத்துக்கு	சரிதாரம்
அவிட்டத்துக்கு	பேசிதாரம்

உத்திரட்டாதிக்கு	சரிதாரம்
கார்த்திகைக்கு	பேசிதாரம்
திருவாதிரைக்கு	சரிதாரம்
ஆயிலியத்திற்கு	பேசிதாரம்
உத்திரத்திற்கு	சரிதாரம்
சுவாதிக்கு	பேசிதாரம்
கேட்டைக்கு	சரிதாரம்
உத்திராடத்திற்கு	பேசிதாரம்
சதயத்திற்கு	சரிதாரம்
ரேவதிக்கு	பேசிதாரம்.

இந்தப்படி பரணிமுதல், கூ-நட்சத்திரமும் இதில்சொன்னபடி யெண்ணிக்கொண்டு யோகத்தை அறியவும்.

ஜென்மநட்சத்திரம் பார்க்குநிலை.

ஜென்மநட்சத்திரம் முதல் கடைசிநட்சத்திரம்வரைக்கும்எண்ணினதொகையை நாலில்பெருக்கி திதிவாரங்கூட்டி நவக்கிரகத்தில் கிழக்கேநின்றது ஆதித்தன்-சோமன்-லாபயோகம்-அங்காரகன்-மிருத்தியு - புதன்-பிரகஸ்பதி-லாபம்-சுக்கிரன்-சவுக்கியம்-சனி-மகாபாண்டம்-ராகு-காதாபாதம்-கேது-மகதயன் இதுநித்தியபலன்.

இலக்கினத்தில் குருவிருக்கினும் சுக்கிரனிருக்கினும் அப்போதுவீடுகட்டினால் ஐந்நூறுவருடம் சுகமாயிருப்பார்கள். லக்கினத்தில் புதனிருந்தால் ஐம்பதுவருடம் சுகமாய்வாழ்ந்திருப்பார்கள் லக்கினத்தில் புதனும் சுக்கிரனும் குருவும் இருந்தால் ஐம்பது வருடம் ஸ்தம்பபிரதிஷ்டை. லக்கினத்தில் குருவும், நாலில்சந்திரனும்செவ்வாயும் சனியும், கக-ல் இருக்க நாற்பதுவருடம் சுகமாகவிருக்கும். லக்கினத்தில் சுக்கிரனிருக்க நூறுவருடம் சுகமாகவிருக்கும். சிங்கம் கன்னி துலாம் இந்தமூன்று இராசியிலும் சூரியனிருக்க ஈசான்யத்தில் ஸ்தம்பப்பிரதிஷ்டை செய்யவேணும். கும்பம் மேஷம் இக்திரண்டுராசியிலும் சூரியனிருக்க நிருதிமூலையில் ஸ்தம்பப்பிரதிஷ்டைசெய்யவேணும். ரிஷபம் கடகம் மிதுனம் இந்தமூன்றுராசியில் சூரியனிருக்க அக்கினிமூலையில் ஸ்தம்பப்பிரதிஷ்டைசெய்யவேணும். இப்படிபார்த்துச் செய்யாமல் அன்னியமாகச்செய்தால் தரித்திரமுந்துக்கமும்வரும் புருஷனுக்கு ஊனியாம்.

இராசிவிழிப்புராசி.

மேஷம்-ரிஷபம்-மிதுனம்-கர்க்கடகம்-தனுசு-மகரம் இந்த, சு-ராசியும் விழிப்புளராசியாம்.

இலக்கினசுபக்கிரக குரூரநிர்ணயம்.

நாலாமிராசி பத்தாமிராசி ஏழாமிராசி ஒன்பதாமிராசி ஐந்தாமிராசி இவைகளில் சுபக்கிரகமிருந்தாலும், ஷை கிரகமிலக்கினத்

தைப்பார்த்தாலும், ஷெ கிரகம் உச்சத்திலிருந்தாலும், பாபக்கிரகம் ஆறாமிராசி மூன்றாமிராசி பதினொராமிராசியிலிருக்க ஸ்தம்பப்பிரதிஷ்டைசெய்யில் சுபகரமுண்டாம்.

மாதங்களில் காலசர்ப்பகெதி லட்சணம்,

காலசர்ப்பகெதி ரிஷபம் மிதுனம் கடகம் இந்தமூன்று சங்கராந்தியிலும் காலசர்பம், ஈசான்யத்தில்-சிரசும், வாயுமூலையில்-இடுப்பும், நிருதிமூலையில்-வாலும், இதன்பின்பக்கத்திலும், சிம்பம் கன்னி துலாம் இந்தமூன்றுசங்கராந்தியிலும் வாயுவுமூலையில்-சிரசும், நிருதிமூலையில்-இடுப்பும், அக்கினிமூலையில்-வாலும், இதன்பககமாகவும், விருச்சிகம் தனுசு மகரம் இந்தமூன்றுசங்கராந்தியிலும், அக்கினிமூலையில்-சிரசும், ஈசான்யமூலையில்-இடுப்பும், வாயுவுமூலையில்-வாலும், இவ்விதமாக இருக்கும் இடுப்புப்பக்கம் ஸ்தம்பப்பிரதிஷ்டைசெய்யிற் சுகமுண்டாம். வாயின்மேற்செய்யில் மிருத்துபயம். முதுகின்மேற்செய்யில் கெடுதியுண்டாம். வாலின்மேற்செய்யில்சலனம். இப்படிக்கில்லாத விடத்தில் ஸ்தம்பப்பிரதிஷ்டைசெய்யில் சம்பத்துண்டாம்.

சூசிகாசங்கராந்தி நிர்ணயம்

ரிஷபம் கடகம் மிதுனம் இந்தசங்கராந்தியில் சூரியனிருக்க, கன்னி கும்பம் துலாம் இதில் சம்பந்தமானாலும், உத்திரம் அஸ்தம் சித்திரை இந்தமூன்று நட்சத்திரத்திலும் சந்திரனிருக்க, அக்கினி மூலையில் ஸ்தம்பப்பிரதிஷ்டைசெய்யலாம். கும்பம் மீனம் மேஷம், இந்தசங்கராந்தியில் சூரியனிருக்க, ரிஷபம் மிதுனம் கடகம் இது சம்பந்தமானாலும், உரோகணி மிருகசீரிடம் புனர்பூசம் இந்தமூன்று நட்சத்திரத்திலும் சந்திரனிருக்க நிருதிமூலையில் ஸ்தம்பப் பிரதிஷ்டைசெய்யவும், இந்தப்படிக்கு பிரதமஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யலாம். சுபப்பிரதம் அன்னியமார்க்கத்தில் செய்தால் கேடுவரும்.

ஜென்மகேந்திர கிரகபலன்

பிரகஸ்பதியிருக்கும் லக்கினத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டைபண்ணி புதனிருக்கின்ற லக்கினத்தில் தாலமேத்தி சுக்கிரனிருக்கின்ற லக்கினத்தில் ஓமேமுடிஞல் அந்தவீட்டுக்கு அக்கினிபயம், சோரபயம். இராஜபயமுமில்லை. சலராசியில் சந்திரனிருக்கினும், நி-கூ ல்-சந்திரனிருந்தாலும்சுக்கிரவாரத்தில்வீடுகட்டினல்சம்பத்துண்டாம்.

மனைகளின் இராஜயோகம்.

குருவாரத்தில் கடகம் மீனம் தனுசு இந்தலக்கினத்தில் பிரகஸ்பதியானாலும். சுக்கிரனானாலுமிருக்க வீடுகட்டினால் அந்தவீட்டில் சவுக்கியமாய் ராஜாதிபதியாய் புத்திரசம்பத்துண்டாகி சுகமாயிருப்பார்கள். சுபக்கிரகம், ௧0-ல் இருந்தாலும் லக்கினத்தைப்பார்த்துக்கொண்டிருந்தாலும் அப்படிப்பட்டவேளையில் ஸ்தம்பப்பிரதிஷ்டைசெய்தால் சுபப்பிரதமாகும். மீனலக்கினத்தில்சுக்கிரனிருக்கவானாலும், ௪-ல்பிரகஸ்பதியிருக்கவானாலும், ௧0-ல் ௨-ல்உச்சத்தானமாயிருந்தசனி-௧௧-ல் இருந்தாலும் அப்படிப்பட்ட லக்கினத்தில் ஸ்தம்பப்பிரதிஷ்டைசெய்தால் சுகமுண்டாம்.

நிலநீளம் வைக்கும்விதி

ஒன்றானநிலம் ஒருவிரலொத்திக் தள்ளிவைப்பது யாதொரு நீளத்தையும், ௮-பங்குசெய்து, ௭-உட்கூடு ஒன்னை r, ௯-செய்து மேல், ௫-கீழ், ௪-தளமட்டம்வைப்பது நிளநீலத்தை, ௯-செய்து உட்கூடு, ௨-௯-செய்து- மேல்-௫, கீழ்-௪, வேறு நிலநீளத்தை, ௭-செய்து, ௬-உட்கூடு, ௧·௯ செய்து மேல-௫ கீழ்-௪, நிற்பதங்கள்பற்றி வைக்கவேண்டுமென்பதே உட்கூடுவிரல் முறியாமல்வைப்பது உட்கோட்டிற் பாதிபோம் விரலொதறிக்கொள்வது.

பங்குனிமுதல் மூன்றுமாதம் வடக்குமுகவாசலும். ஆனிமுதல் மூன்றுமாதம்கிழக்கு முகவாசலும், புரட்டாசிமுதல் மூன்றுமாதம் தெற்குமுகவாசல்விட உத்தமம.

மார்கழி தை மாசி இந்த மூன்றுமாதமும் மேற்கே தலையானபடியால மேற்கே வாசல்விடவும.

ஆருக்கனிலையறிய,

சனிக்கிழமைராத்திரி,௩0-நாழிகையும், ஞாயிற்றுக்கிழமைபகல், ௩0-நாழிகையும், தெற்கிலும், ஞாயிற்றுக்கிழமைராத்திரி௩0·ம் திங்கட்கிழமை, ௧0-ம், தென்மேற்கிலும், செவ்வாக்கிழமை பகல் ௩0-ம்இராத் திரியில், ௧0-ம்மேற்கிலும், மற்ற, ௨0-ம், புதன்கிழமை பகல், ௩0-ம், வடமேற்கிலும், புதன்கிழமை இராத்திரி ௩0-ம், வியாழக்கிழமைபகல், ௩0-ம், இராத்திரியில், ௧0-ம், வடக்கிலும், மற்ற ௨0-ம், வெள்ளிக்கிழமை, ௬0-ம், வடகிழக்கிலும்,சனிக்கிழமை பகல், ௩0-ம் கிழக்கிலும், ஆருக்கனிருக்கும் அக்கினிமூலை பாழாம்.

திசையோனிநிலை

கருடன்	கிழக்கு	பூனை	தென்கிழக்கு
சிங்கம்	தெற்கு	நாய்	தென்மேற்கு

பாம்பு	மேற்கு	எலி	வடமேற்கு
யானை	வடக்கு	முசல்	வடகிழக்கு

அருக்கனில் கருடனை வைத்து முறையேபார்க்கும்போது எதிர்க்கெதிர் பகையோனிநிற்கும், அவைகளுள் கருடன் திசையிலிருந்து பாம்புத்திசைக்குப்போகலாம், பாம்புத்திசையிலிருந்து கருடன் திசைக்குப் போகலாகாது. ஏனெனில் கருடன் இரையெடுக்கப்போகும், பாம்பு இரையாகவரும் ஆதலாலென்க. ஒருவன்யாத்திரைக்குப் பட்சிமுதலிய சகுனங்கள் பார்க்கும்போது இரையாகும் யோனித்திசையிலிருந்து இரையெடுக்கும் யோனித்திசைக்கு அவை போகலாகாது.

விஷ்டி தோஷம்

பூர்வபட்சச்சதுர்த்தசியில்ஐந்தாசாமம்மேற்கிலேயும், அஷ்டமியில் இரண்டுசாமம் தென்கிழக்கிலேயும், ஏகாதசியில் ஏழுசாமம்,வடக்கிலேயும், பூரணையில்நாலுசாமம் தென்மேற்கிலேயும், அமரபட்சத்திரிதிகையில் ஆறுமாசம் வடமேற்கிலேயும், சத்தமியில்மூன்றுசாமம்தெற்கிலேயும்,தசமியில்எட்டுசாமம்வடகிழக்குலேயும், சதுர்த்தசியில் முதல்சாமம்கிழக்கிலேயும் விஷ்டியுண்ணுதலால், இச்சாமங்களில் சுபகாரியங்களும், இத்திசையில் யாத்திரையுஞ் செய்யலாகாது,

வீடுகளுக்கு தெருவாசற்கால்வைக்கும் இலக்கணம்.

ஆவணிமாதம் கட்டும்வீட்டுக்கு கிழக்குபார்த்த வாசற்படிவைக்கலாம்.

கார்த்திகைமாதம் கட்டும்வீட்டுக்கு தெற்குபார்த்த வாசற்படி வைக்கலாம்.

மாசிமாதம் கட்டும்வீட்டுக்கு மேற்குபார்த்த வாசற்படிவைக்கலாம்.

வைகாசிமாதம்கட்டும்வீட்டுக்கு வடக்குபார்த்தவாசற்படிவைக்கலாம்.

எந்தமாதங்களில் வாசக்கால்வைத்தாலும் திசையறிந்து வைக்கவேண்டும்,

மேஷம் ரிஷபம் இவ்விரண்டுமாதங்களில் வீடுகட்டில் வடக்குப்பார்த்த வாசற்படி வைக்கவும்.

கடகம் சிங்கம் இந்த இரண்டுராசியில் சூரியனிற்க வீடுகட்டினால் கிழக்குபார்த்த வாசற்படி வைக்கலாம்.

துலாம் விருச்சிகம் இவ்விரண்டுராசியிலும் சூரியனிருக்க வீடு கட்டினால் தெற்குப்பார்த்த வாசற்படி வைக்கலாம்.

மகரம் கும்பம் இவ்விரண்டுராசியிலும் சூரியனிருக்க வீடுகட்டினால் மேற்குப்பார்த்த வாசற்படி வைக்கலாம்.

கன்னி மிதுனம் தனுசு மீனம் இந்தராசிகளில் சூரியனிருக்க வீடுகட்டினால் வாசக்கால் வைக்கலாகாது.

மேஷ சிங்க தனுசுராசியில் ஜனித்தோர்க்கு வடக்குமுகமான வீடும், ரிஷபகன்னி மகரராசியார்க்கு தெற்குமுகவீடும், மிதுன துலா கும்பவிராசிக்காரருக்கு மேற்குமுகவீடும், கடகவிருச்சிகமீனவிராசிக்காரருக்கு கிழக்குமுகவீடு கட்டிடங்களில் வசிக்கில், ஐசுவரியம். இராஜயோகம் புத்திரகுடும்பவிருத்தியும், நோயற்றவாழ்வுமுண்டாம் அல்லது, மாறியிருக்கில் கடனும் பலரோகவாதையும் உண்டாகும்.

திசையறிந்து வாசற்கால் வைக்கும்விதி

கிழக்குப்பார்த்த வாசற்படியுள்ள வீட்டுக்கு ஈசான்யமுதல்அக்கினிவரைக்கும் அளர்ந்துஅதை அ-பாகம்பண்ணினால்.

முதற்பாகம்—ஆனி. இரண்டாம்பாகம்—சோகம் மூன்றும்பாகம்— தனப்பிராப்தி. நாலாம்பாகம்— இராஜஸன்மானம். ஐந்தாம் பாகம்= புத்திரவிருத்தி ஆறும்பாகம்=சுகம். ஏழாம்பாகம்—துக்கம், எட்டாம்பாகம்—ரோகம்.

மேற்குப்பார்த்த வாசற்படிக்கு நிருதிமூலை முதல் வாயுமூலை வரைக்கும் அளந்து அ-பாகம் பண்ணினால்,

முதற்பாகம்—ஆனி. இரண்டாம்பாகம்—சத்துருவிருத்தி. மூன்றும்பாகம்—சுகம். நாலாம்பாகம்—தனம்.ஐந்தாம்பாகம்—பாக்கியம். ஆறும்பாகம்= சுகம். ஏழாம்பாகம்—பயம். எட்டாம் பாகம் நாசம்.

வடக்குப்பார்த்த வாசற்படிக்கு வாயுமூலைமுதல்ஈசான்யமூலை வரைக்கும் அளந்து,அ-பாகம்செய்தால்.

முதற்பாகம்—மனையாள்நாசம். இரண்டாம்பாகம்—பலயீனம் மூன்றும்பாகம்—தனஆனி. நாலாம்பாகம்—தானியவிருத்தி. ஐந்தாம்பாகம்—தனம். ஆறும்பாகம்—சௌக்கியம். ஏழாம்பாகம்—துக்கம். எட்டாம்பாகம்—பாதகரம்.

தெற்குப்பார்த்த வாசற்படிக்கு அக்கினிமூலமுதல் நிருதி மூலைவரையில் அ-பாகம் பண்ணினால்.

முதற்பாகம்—தனஹானி.இரண்டாம்பாகம—சத்துருவிருத்தி மூன்றும் பாகம்=சுகம், நாலாம்பாகம்—தனவரவு. ஐந்தாம் பா

கம்—பாக்கிமுண்டாம். ஆறாம்பாகம்—நன்மையுண்டாம். ஏழாம் பாகம்—பயம். எட்டாம்பாகம்—நாசமாம்.

இந்தப்பாகங்களில் இயற்கைதெரிந்து நல்லபாகத்தைப் பார்த்து வாசற்கால் வைக்கவேண்டியது.

நவக்கிரகபலன்களறிந்து வாசற்கால்வைக்கும் நிர்ணயம்

கிழக்குப்பார்த்த வாசற்படிக்கு ஈசானியமுதல் அக்கினிமூலை வரைக்கும் அடியளந்து,கூ-பாகம் பண்ணவும்.

தெற்குப்பார்த்த வாசற்படிக்கு அக்கினிமூலைமுதல்நிருதிமூலை வரைக்கும்,கூ-பாகம் பண்ணவும்.

மேற்குப்பார்த்த வாசற்படிக்கு நிருதிமூலைமுதல் வாயுமூலைவரைக்கும் அளந்து,கூ-பாகம் பண்ணவும்.

வடக்குப்பார்த்த வாசற்படிக்கு வாயுமூலைமுதல் ஈசானியமூலைவரைக்கும்,கூ பாகம் பண்ணவும்.

இந்நான்குதிக்கும் முதற்பாகம்—சூரியன். இரண்டாம்பாகம்-சந்திரன் மூன்றாம்பாகம்—அங்காரகன், நான்காம்பாகம்—புதன் ஐந்தாம்பாகம்—குரு. ஆறாம்பாகம்—சுக்கிரன். ஏழாம்பாகம்—சனி எட்டாம்பாகம்— ராகு ஒன்பதாம்பாகம்—கேது. இந்நவக்கிரகத்தில் பிரகஸ்பதியிருக்கிற பாகத்தில் பிரதானம்கோயிலுககு வாசற்கால் வைக்கலாம்.

சுக்கிரன்பாகத்தில் வீட்டிற்கு வாசற்கால்வைக்கலாம். அதன் பாகத்தின் மாட்டுத்தொழுவத்திற்கும் வாசற்கால் வைக்கலாம்.

மேலும் புதன் குரு சுக்கிரன் இவைகளில் கோயிலுக்கும் வீட்டிற்கும் மாட்டுத்தொவழுத்திற்கும்வாசற்கால் வைக்சலாம்.

வாசற்காலுக்கு இடதுபக்கததிற் கதவுவைக்கவேண்டும்.

இப்பால் ஏழுசாண் நீளமும் மூன்றுசாண் அகலமுமுள்ள வாசற்கால் உத்தமம்.

ஒன்பதுசாண்நீளமும் ஐந்துசாண் அகலமுமுள்ளவாசற்காலும் உத்தமம்.

இரண்டுமரத்தினுல் வாசற்கால்பண்ணலாகாது. மூன்றுவித மரத்தினுல் கட்டில்செய்யலாகாது.

கதவுக்கு ஒற்றைப்படை பலகைசேர்த்துச் செய்யவேண்டும் இரட்டைப்பலகை சேர்த்துப் பண்ணலாகாது.

மூலைக்குத்தாகாதறிய,

வீட்டில்நுழையும்போது வீட்டுவாசற்படிக்கு எதிரில்கட்டைச்சுவறிருந்தால் சத்துருபயமாம்.

தெருவாசற்படியுயர்ந்து உள்வாசற்படிதாழ்ந்திருக்கக்கூடாது அப்படியிருக்கில் வரும்பலன் நீங்கிவிடும்.

வாஸ்துவிழிநோக்கில் இருபத்தெட்டு

பங்கில் முகூர்த்தம்.

வாஸ்துவின் விழிநோக்கறிந்து முகூர்த்தம்செய்வதாகையால் அந்தமனையை இருபத்தெட்டுப் பாகஞ்செய்து காலில் பதினேழு பாகந்தள்ளி தலையிற்பத்துபாகந்தள்ளி நடுவிலொருபாகத்தில் முகூர்த்தஞ்செய்தால் இராஜசம்பத்துண்டாம்.

வாஸ்துவின் அதிகாரலட்சணமாவது நாழிகை மூன்றேமுக்காலுக்குச் சமயம் ஐந்து.

முதற்சமயங்கடிகைமுக்காலுக்குள்தந்தசுத்திசெய்வான் அதில் முகூர்த்தஞ்செய்தால் அரசராற் பயமுண்டாம்.

வாஸ்து இரண்டாஞ் சமயமானதிற் கடிகைமுக்காலுக்குள் ஸ்நானஞ்செய்வன் அதில்முகூர்த்தஞ்செய்தால் பீடையுண்டாகும்.

மூன்றாஞ்சமயக்கடிகை முக்காலுக்குள்ளே பூசைசெய்வன் அதில் முகூர்த்தஞ்செய்தால் வறுமையால் வாடுவார்கள்.

நாலாஞ்சமயமான கடிகைமுக்காலுக்குள் போஜனம் அதில் முகூர்த்தஞ்செய்தால் புத்திரசந்தானமுண்டாகும்.

ஐந்தாஞ்சமயமான கடிகைமுக்காலுக்குள் தாம்பூலங் கொள்வன் அதில் முகூர்த்தஞ்செய்தால் மகாவுத்தமம்.

கிரக பலன்,

வியாழம் வெள்ளிவாரமும் லக்கினம்நாலு எழிற்சுபர்ஆறிலும் மூன்றிலும் பாவரிருக்க கோபுரம் சாலைவீடுமாளிகை இவைகள்கட்டில் நூறுவயது பெற்றுவிளங்கும்.

ஜென்மலக்கினத்திற்கு 0 நாலுபக்கத்தில் சந்திரன்நிற்க, பதினொன்றில் இராகு-செவ்வாய்-சனி இவர்களிருக்கில் மனைமுகூர்த்தஞ்செய்தால் வயதுநூறுவருஷம் விளங்கும் லக்கினத்தில்குருவும் சுக்கிரனுமிருந்தும் மூன்றில்சூரியனிருக்க ஆறில் செவ்வாயிருக்க, முகூர்த்தஞ்செய்யிலந்தமனை நூறு௵ விருத்தியாய்விளங்கும்.

லக்கினத்தில் சந்திரன்நிற்க, ௪-ல்புதனிருக்க, குரு உச்சமாக முகூர்த்தஞ்செய்யில் அந்தமனைக்கு அறுநூறுவயதாகும். இலக்கினத்தில் பத்தில் சுக்கிரனிருக்க, மூன்றில்புதனிருக்க. பாவரஸ்தமான மகாமுகூர்த்தஞ்செய்யில் அந்தமனைக்கு அறுநூறுவயது விளங்கும்.

குருசுக்ஷேத்திரத்திலிருக்க, வெள்ளி வீட்டில்புதனிருக்கமுகூர்த்தஞ்செய்யில் எண்ணூறுவயதிருக்கும். சூரியன் அஸ்தமான

---

0 நாலுபக்கமாவது-௧-௪-௭-௰-ஆமிடமாம்.

காலத்தில் சந்திரனிருக்க, ஆலயமுகூர்த்தஞ்செய்யில் ஆயிரம் வருஷம் விளங்கும்.

சுக்கிரனுதயமாகவெழில் இராஜனிருக்க, பத்தில்சந்திரனிருக்க முகூர்த்தஞ்செய்யில் ஆயிரம்வருஷம் விளங்கும். இலக்கினத்திற் சுக்கிரனிருக்க குரு சுக்ஷேத்திரத்தில் இருக்க முகூர்த்தஞ்செய்யில் அக்கினிபயமில்லை.

கடகம்-மகரம்-மீனம் இவைகளிற்சந்திரனிருக்க, வைக்கோல் போட்டால் ஜெயமாகும். பூராடம்-திருவோணம்-உரோகணீ - உத்திராடம்-உத்திரட்டாதி-ஆயிலியம்-மிருகசீரிடம் இவைகளில் குருவிருக்க குருவாரத்திற்செய்ய மகிழ்ச்சியுண்டாம்.

சலவிராசியில் சுக்கிரனிருக்க, சுக்கிரவாரமாயிருந்தால் செல்வமுண்டு. சலவிராசியில் சந்திரனிருக்க சோமவாரமாகில் மனையாள் கெர்ப்பமாயினும் முகூர்த்தஞ்செய்யினும் குடிபுகினும் மத்திபமென்று மயனென்பவர் சொல்லிய வாக்கியமாகும்.

கிழக்கு	இந்திரன்	மேற்கு	வருணன்
தென்கிழக்கு	அக்கினி	வடமேற்கு	வாயுவு
தெற்கு	இயமன்	வடக்கு	குபேரன்
தென்மேற்கு	நிருதி	வடகிழக்கு	ஈசானியன்

இலக்கின பலன்

ரிஷபம்-சிங்கம்-விருச்சிகம்-கும்பம் இந்நான்கும் ஸ்திரலக்கினம் உத்தமம். மேஷம்-கடகம்-துலாம்-மகரம்-இந்நான்கும் சரலக்கினம் மத்திபம். மிதுனம்-கன்னி-தனுசு-மீனம் இந்நான்கும்உபயராசியாகையால், வீடுகட்டக்கூடாது, ஆரம்பலக்கினத்திலிருந்துமுடிவிலக்கினத்துக்குச் சத்துருக்ஷேத்திரமான லக்கினேச்சுரன் சத்துருக்ஷேத்திரத்திலிருந்தாலும், ஆரம்பலக்கினத்திற்குப்பத்தாமிடத்திலிருந்தாலும் அப்படிப்பட்டவேளையில் வீடுகட்டினல். பராதீனமாய்ப்போகும்.

மகரம்-மிதுனம்-சிங்கம்-ரிஷபம் இந்தராசியுடையோர் கிராமமத்தியில் வீடுகட்டலாகாது.

கத்திரிக்கோல்போலும். மூன்றுமூலைபோலும், சேத்திரம்போலும், தலைபோலும். மத்தளம்போலும், கொட்டைப்பாக்குபோலும், உள்ளும்புறம்புமாயிருக்கப்பட்ட பூமியிலும் உப்பு நிலகிராமத்திலும்

அல்லது அதற்கு மூலையிலும், பள்ளநிலத்திலும், தண்ணீரோடுகிற நிலத்திலும், பலர்கூடாதென்று தடுக்கும்நிலத்திலும், கோயில்நிலத்திலும், புற்றிட்டிருந்தநிலத்திலும், சுடுகாட்டுநிலத்திலும், ஆடுமாடு கட்டப்பட்டநிலத்திலும், கிழக்கு மேற்கு அகலங்குறைந்த நிலத்திலும், தண்ணீர்சமீபித்த நிலத்திலும், வீடுகட்டலாகாது, கட்டில்பலவித துன்பமுண்டாகும்,

பூமியைச்சோதித்து வீடுகட்டும்நியமம்.

வெளுத்தபூமி, தித்திப்பானபூமி, தாமரைப்பூ வாசனையுள்ள பூமி, இவைகளில் பிராமணர் வீடுகட்ட—உத்தமம்.

சிவந்தபூமி, துவர்ப்புபூமி, குதிரைவாசனையுள்ளபூமி, இவைகளில் அரசர்கள் வீடுகட்டினுல்—உத்தமம்.

கறுத்தபூமி, கசப்பு காரமுள்ளபூமி, தானிய வாசமுள்ளபூமி, இவைகளில் சூத்திரர் வீடுகட்ட—உத்தமம்.

பச்சைபூமி, புளி உப்பு பொருந்தியபூமி இவைகளில் சங்கமசாதிகள் வீடுகட்ட—உத்தமம்.

நீங்காதமதுரமும் பரிமளம்பொருந்திய பூமியில் சகலசாதிகளும் வீடுகட்ட--உத்தமம்.

க்ஷேத்திர ஆரூடம்

இந்தத்திக்கில் வீடுகட்டினுல் நல்லதாவென்றுகேட்கும்போது அந்தத்திக்கிலிருப்பவர்க்கு எதுவோ அந்தக்கணக்கை வலதுபக்கத்தில்வைத்து கர்த்தனுமாதி அட்சரவர்க்குக்கும் இதுவே அந்தக்கணக்கு இடப்பக்கத்தில்வைத்து அப்பேருக்குக் கொடுத்துமிகுந்தது தனம், முன்வலப்பாகத்தில் வந்திருந்தகணக்கை இடதுபாகத்தில்வைத்து எட்டுப்பேருக்குக் கொடுக்கமிகுந்தது குணம் தனம் அதிகமாகவும் குணம்குறைந்திருந்தால் நல்லது. குணமதிகமாயிருந்து தனங்குறைவாயிருந்தால் நல்லதல்ல. தனமும் குணமும் சரியாயிருந்தால் ஆதாயமும், விரையமுஞ் சமமாயிருக்கும்.

குழிகெல்லி ஜலம்விடும் சோதனை,

வீடுகட்டும்படியான இடத்தில் ஈசான்யபாகத்தில் நாற்சதுரமாகக்கெல்லி அக்குழியில் ௩-சுமங்கலிகளால் ஜலங்கொண்டுவந்துவிடும்போது, அந்தஜலம் வலமாக ஓடுமானுல், பொருளும் செல்வ

மும் சேரும், இடமாக ஓடிமானல், மனக்கிலேசம் மரணம். குழிழி ளம்பினாலும், ஜலம்உள்ளேபோனாலும் மனக்கிலேசமும், மனச்சந் தேகமும் உண்டாம்.

மனைமுகூர்த்தகாலத்தில் குழியில் நீர்விட வேண்டியவிதி.

மனை ஆரம்பக்குழியில் மூன்றுசுமங்கிலிகள் கலந்து ஓர்பாத்திரத்தில் ஜலம்கொண்டுபோய்ச் சொரிந்துவிட்டு, உடனே அக்குழியைவிட்டுநீங்கி, திரும்பிப்பாராமல் வந்துவிடவேண்டுமென்பதாம்.

மேற்படிகுழியில் புட்பம்விடும்சோதனை

மனை ஆரம்பகாலத்தில் அகழ்த்துகின்ற சதுரக்குழியில் ஜலம் பெய்து அஜ்ஜலம் சுழலுகிறபோது புட்பமொன்றை அதில் இடுவதென்றும், அஃதுசூரியனைவலமாகச் சுற்றிவந்தால் நன்மையென்றும், இடமாகவந்தால் தீமையென்றும், தெரிந்துகொள்ளச்சகுனம் பார்க்கவேண்டுமென்று சிலர்சொல்லுகிறதுண்டு. அதுவிதியல்ல எனெனின், ஒருவர்தாம் உத்தேசித்தகாலி ரிவேசனமானது சகலநலங்களையும் பொருந்தியிருப்பதை அறிந்தே மனப்பிரஸ்தத்துடன். அவ்வீடுகட்டுவதற்கு வேண்டிய சகலசாமான்களையும் சித்தப்படுத்தியபோது திரும்பவும் மற்றும் ஓர்சகுனம் பார்க்கவேண்டுமென்பது அடாதகாரியம். அன்றியும் எடுத்தவேலையை நிர்விக்கினமாய்க்கூட்டிமுடிக்கும்பொருட்டு முதலில்விக்கினேஸ்வரரை உபாசித்து அப்பால்மனையின் அதிதேவதையாகிய பூமிதேவியையும் உபாசித்துநடத்துகின்றவர்களுக்கு குறையொன்றும் வராதென்கிறநிச்சயத்துடன்மேற்கூறிய இரண்டுதெய்வங்களையுந் தொழுது வேலையைத்துவக்கவேண்டு மென்பதாம்.

வலமதிவட்டமான ஓர்பள்ளஞ்செய்து அதிற்பூவும் தண்ணீரும் விட்டு குறிபார்க்கும் விபரம்

இந்திரன் திக்கில் பரிமளம்பொருந்திய மலரானதுநிற்குமாகில் அதிகசவுந்திரியம் பொருந்திய லட்சுமிவிலாசமும் தனதானியசம்பத்தும் சந்தானபாக்கியமும் தீர்க்காயுசு முண்டாவதோடு பாற்பசு முதலிய கறவைகளுஞ் சேரும்,

அக்கினிதிக்கில் வாசம்வீசுகின்ற புட்பமானது வந்துநிற்குமாகில் கற்புநிலைமை பொருந்திய பெண்சாதியானவள் மலடியாவாள் இதன்றிவிஷத்தாலும், பாம்பினாலும், பயமும்அச்சமும்உண்டாகும் அக்கினிசுவாலையினாலும், கள்ளர்கள்பயத்தினாலும், பொருள்விருத்தியில்லாமல் எஜமான்நாசமாவான்.

இயமன் மூலையென்னுந் தென்திக்கில் வாசம்வீசும் மலரானது வந்து நிற்குமாகில், மனதில் சிந்தையும், வியாகூலமும் உண்டாவதோடு பலபேரால் கலகமும், தீங்காகிய காரியமும், தீமை, பிணி, அச்சம், முதலியவைகளும் அதிகரித்துண்டாகும்.

கன்னிமூலையில் அம்மலரானது வந்து நிற்குமாகில். பொருளும், அன்னமும், கனகமும். இலட்சுமிப்பிரகாசமும், நவதானியலாபமும், பிறவிச்செல்வமும், என்றும் நீங்காமல் வற்றாச்சமுத்திரமாய் மென்மேலும் பெருகவுண்டாகும்.

வருணன் மூலையில் அமுதம் வாசமும் பொருந்திய பூவானது வந்துநிற்குமாகில், நிறைசெல்வம் மாறாமலிருப்பதுமல்லாமல் நினைத்தகாரியமும் ஆரம்பித்த தொழில்களும் கைகூடி ஜெயமாகும்.

வாயுமூலையில் விகசிதம்பொருந்திய மலர்வந்து நிற்குமாகில் பதினெண் காசமென்னும் க்ஷயரோகத்தில் மரணமும், சோரர்களினால் தனமுதலிய பொருட்சேத முண்டாவதோடு அம்மனையானது அலகைவாழுஞ் சுடுகாடாகும், அன்றியும், சகல்பாக்கியமும் அழிந்துபோகும். சங்காதரர் மனைவாழ்வோர்களி லிருவரேனும் சீதப்பிரமை யாவர்.

குபேரன திக்கில் விநோதம்பொருந்திய மலரானது வந்துநிற்குமாகில், தனதான்ய சம்பத்தும், புத்திரசந்தானமும், ஆயுள்விருத்தியும், பாக்கியமும், அதர்மசிந்தைநீங்கி, தர்மசிந்தையோங்கி, அபயமென்றவரைக்காத்தும் பொருளுதவி செய்துவரப்பட்ட மகாபுண்ணியவானாகவும் இருப்பான்.

ஈசான்யமூலையாகிய பரமசிவத்தின் திக்கில் பரிமளம்பொருந்திய மலரானது வந்துநிற்குமாகில் கனக ஐஸ்வரியமும் தீர்க்காயுளும், புத்திரசம்பத்தும், வாழ்வும், மென்மேலும் விர்த்தியாய்ப்பெருகி நீடுழிகாலம் நிலைநிற்கும். இதன்றி பெரியோர்களுக்கும் தபோதனர்களுக்கும் அன்னபானதி கொடுக்கவல்லவனுமிருப்பான்.

நிலைவைக்க.

மனை அகலத்தை, கூ-பாகம்செய்து சந்திரபாகத்திலாவது, புதபாகத்திலாவது நிலைவைக்கவும்.

சூரியவாஸ்துவீதிக்கு கிழக்கு முதலாகவும், சந்திரவாஸ்துவீதிக்கு தெற்கு முதலாகவும் கொள்க.

தேவாலயம், ராஜக்கிரகம், சத்திரம் இவைகளுக்கு மத்தியில் வைக்கவும். மனையின் கீழ் மேல்தெற்கு-வடக்கு, முழத்தினால் அளந்துமாறி கண்ட தொகைக்கு குழியென்றும், ஆயமென்றும், பகணமென்றும் பெயர், மனையின் சுற்றளவை முழமாகவும்வைத்து அங்குலத்தாலேனும், விதஸ்தியாலேனும், முழத்தாலேனும் அளந்து கண்டதொகையை ஆயமாகவும் கொள்ளலாம். இதற்கு பரிநாமமென்றுபெயர்.

சுவர்களினுயர்வு நாட்சி லட்சணம்.

ஒருமுழம் அகலப் பிரமாணத்திற்கு இரண்டுமுழப்பிரமாணம் சுவர் வைக்கவேண்டும், கO-சாணுயரமுள்ள சுவர் அரசர்களுக்கும், பிராமணர்களுக்குமாம். ௯-சாணுயரமுள்ளசுவர் வைசியருக்கும், சூத்திரர்களுக்குமாம். அ-சாணுயரமுள்ள சுவர் சங்கரசாதியாருக்காகும் இந்த கணக்கிற்கு குறைவாயிருக்கலாகாது. இதையறிந்து செய்யவேண்டியது. சுவர்வைக்கும்போது விழுந்தால் சோரபயம். வெளிப்பக்கமாய்ச் சுவர்விழுந்தால் கலகம். உட்புறம் விழுந்தால், வீட்டுக்குடையவனுக்காகாது.

சந்துகுந்தலறிய

சந்துகுத்தல், கோடிகுத்தல், குளக்குத்தல், கேணிக்குத்தல், கட்டைக்குத்தல் ஆகாது.

வாசற்படி வைக்கும் லட்சணம்

ஒருவீட்டின் நாலுபக்கத்திலும் வாசற்படிவைத்திருந்தால் விகமிதோமுகமென்று சொல்லப்படும். அதன்பலன் விர்த்திப்பிரதம் கீழண்டைவாசல்படியில்லாமல் மூன்றுபக்கத்திலுமிருந்தால்வியாக்கிரபாதமென்னப்படும். இதன்பலன் பசுவுகளுக்கும், மிருகங்களுக்கும் பாதையாய் திருடர் பயமாகும். தெற்குமுகம் வாசற்படியில்லாமல் மற்ற மூன்று பக்கத்திலுமிருந்தால் பாக்கியப் பிரதம், மேற்குமுகமாகவாசற்படியில்லாமல்மற்ற மூன்றுபக்கத்திலிருந்தால ஸ்ரீநிலயமென்று சொல்லப்படும். உத்தமபலன்நன்முகவாழ்வார்கள் வடக்குமுகமாய் வாசற்படியில்லாமல் மற்ற மூன்றானால் கமலாகரம் சுபம்.

மனைமுகூர்த்தஞ்செய்யுமிடத்துசூன்யம்.

தலையோடு, எலும்பு, யானையோடு, கூபம், மயிர், மரம், சுக்கிரன், கருங்கல், சாம்பல் இவைகள், இருக்கிலாகாது. இதுகள்

இருந்தால் கர்த்தா நாசமடைவர். அல்லது இரும்பு, ஈயம், பித்தளை காணில் மத்திமபலன் உண்டாம், அல்லது பொன், தேரை, செங்கல், சங்கு, பால்வார்க்கும்சங்கு, வெள்ளி, இரத்தினங்கள், இவை முதலிய வருக்கங்களைக்காணில், அந்தக்கிரகக் கர்த்தாவுக்கும், அக்கிரகத்தில் வசிக்கும் யாவருக்கும் க்ஷேமகரமுண்டாகும்.

கம்பம்.

கம்பங்கள் அடி அடியினும், நுனி மேலும் இருக்கவும். உத்திரம் விட்டங்களுக்கு அடியை மேற்கு-தெற்கிலும், நுனியைகிழக்கு வடக்கிலும் வைக்க நன்மை, மாறிவைக்கில் தீமையுண்டாம்.

ஒருமனையை அறுபத்துநான்கு பாகஞ்செய்து வீடுகட்டுவதற்கு லட்சணம்.

மனையைநான்குபாகமாக அளந்துக்கொண்டு அந்த அறுபத்து நான்குபங்கில் மத்தியில்நான்குபங்குபிரமத்தானம், நான்குதிக்கும் உருத்திரபாகம்.

திக்குகள்நான்கு விஷ்ணுபாகமும், மற்றதெல்லாந்தேவர்களது பாகமென்றும் பெயராம்.

அண்டத்துக்கொத்தபடி பிண்டம், பிண்டத்துக் கொத்தபடி வீடு, காசராஜதிகளோடுங்கூடி விளங்கியகிரகம்.

இந்தப்பிரகாரமாய் வீடுகட்டினால் அதற்குவயதுநிதானம் நூறு கன்றுகாலின் கறவைப்பசுக்கள் இவைகள் நாளுக்குநாள் விர்த்தியாவதுமன்றி, தாமரைக்கமலத்தில் வீற்றிராநின்ற இலட்சுமியானவள் சேர்ந்து ஆனந்தத்தாண்டவம் புரிந்துக்கொண்டிருப்பாள்.

சந்திரனுதிக்க, ஸ்தம்பமுதலியவைநாட்டி புதனுதிக்க, காப்பு பூட்ட வெள்ளியுதிக்க. தளம் அல்லது, ஓடு இசைத்து வியாழம் உதிக்க, கிரகப்பிரவேசம்செய்தால் தேவர்போல வாழ்வார்கள்.

மனைக்கு எந்தவாரமோ அந்தவாரமுதல் ஆதிவாரம்வரைக்கும் எண்ண எத்தனை வந்ததோ, அந்த தொகையை ௯-ல் பெருக்கி வந்ததொகை எத்தனையோ அத்தனை கணக்குக்கு அசுவனிமுதலாகத்தள்ளி நின்றநாள் ௯-வரைக்கும் ஒருகண், அதற்குமேல், ௧௨-இரண்டுகண், அதற்குமேல், ௯-நாள் குருடு இப்படி மனைநட்சத்திரத்திற்குள் பார்த்து மனைகண்களை அறியவும்.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

வயது பலனறிவது.

உ௫-வயதுக்குட்பட்டால்-அதமபலன், நன்மையில்லை. உ௫-க்குமேல் ௫0-வயதுவரையில்-மத்திமபலன் சமமாகநடக்கும். ௫0-வயதுக்குமேல்சகலசவுக்கியமும், சம்பத்தும், பூரணாயுசும்உண்டாம்

மனைக்குப் பால்யாதிபருவமறிவது

மனைக்குவந்த அங்கிசத்தொகையை எ-ல் பெருக்கி, ௫-ல் கழித்துவந்தது, க-க்கு பாலன், உ-க்கு யவ்வனம். ௩-க்கு கௌமாரம். ச-க்கு மூப்பு. ௫-க்கு மரணமென்பது.

வீட்டுக்குப்பருவம்பார்க்குவிதி.

மனையின் துருவபதமாகிய ஆயமொத்தத்தை எட்டிற்பெருக்கி ஐந்திற்கழிக்க, மிகுசேடம் மனையின்பருவ மென்னப்படும். அச்சேடங்களுள், ஒன்றுக்குப்பாலன்-நன்மை. இரண்டுக்கு வாலிபன் நன்மை. மூன்றுக்கு அரசன்-நன்மை. நான்குக்குக் கிழவன் தீமை ஐந்துக்கு அந்தியம்-மிகத்தீமை. இவ்விதமாய்க் கண்டுகொள்ளவேண்டுமென்பதாம்.

மனையெடுத்தல் சுக்கிரன் இடம்

கிரகப்பிரவேசகாலங்களில் சுக்கிரன் எதிர்வலம் இருக்கில் தீமை. இடப்புரம் இருக்கில்-நன்மை, 'மூளமாகில்-கிரகாரம்பம் டிெ பிரவேசம்-நிலைவைத்தல், இவைகள் முன்னும்வலமும்-நன்மை பின்னும் இடமும் தீமை மனைபோட வடக்குங்கிழக்கும் நன்றாம் தெற்கும் மேற்கும் தீதாம்;

வீடுகட்டநிச்சயிக்கும்போது நட்சத்திரங்கள் நிற்கும் நிலை.

வீடு அஸ்திவாரமுகூர்த்தம் ஸ்தம்பப்பிரதிஷ்டையும் சூரியன் கார்த்திகை-பரணி. ச-ம் பாதம், ரோகணி முதற்பாதம் இருக்கினும், டிெ சந்திரன்கார்த்திகையிருக்கினும், செவ்வாய்-கார்த்திகை மகரம்-ரேவதி-உத்திராடம்-அஸ்தம்-மூலம்-பூசம்இந்தஎழுநாளிலும் இருந்தால்கிரகபதியாகியஎசமானுக்கு அத்தியந்ததுக்கமுண்டாகும்

எஜமான் கை சாணுல் நாலுசாண் கோல்கொண்டு கிழக்குமேற்கு வடக்கு தெற்கு இந்நான்குதிக்கையுமளந்து இருதுகையுங் குழி

மாறியத்தொகையை ஆயமாகவைத்துக்கொண்டு. திசைப்பொருத்தம் பார்க்கவேண்டியது.

வீட்டெஜமானுடைய காலடியாற் கணக்கிட்டு அதையே முதன்மையாக வைத்துக்கொண்டு ஷெ. மனையில் எவ்வளவு விஸ்தாரமுள்ள கட்டிடங்கட்டவேண்டுமோ அந்தமனைகட்டிடத்துக்குட்பட்ட அகலநீள அளவை கிழக்கு-மேற்கு-தெற்கு-வடக்கு இவ்வளவென்று அளவிட்டு ஒன்றுக்கொன்றுமாறிய குழித்தொகையை துருவபதமாக வைத்துக்கொண்டு

முதலாவது,—அம்மனைக்குவந்தகுறியை துருவமாக்கி எட்டிற் கழித்து தெற்பகர ஆயகம் காணவும் ஷெ தொகையை,

இரண்டாவது,—எட்டில் பெருக்கி பனிரெண்டில் கழித்து மிகுந்தசேடம் ஆதாயம்.

மூன்றாவது,—ஒன்பதில் பெருக்கி பத்தில் கழித்து மிகுந்த சேடம் விரையம்.

நான்காவது,—மூன்றில் பெருக்கி எட்டில் கழித்து மிகுந்த சேடம். 0 யோனி.

ஐந்தாவது,—எட்டில் பெருக்கி இருபத்தேழில் கழித்து மிகுந்த சேடம் நட்சத்திரம்.

ஆறாவது,—நாலில் பெருக்கி முப்பதில் கழித்து மிகுந்த சேடம் திதி.

ஏழாவது,—ஒன்பதில்பெருக்கி ஏழில் கழித்து மிகுந்தசேடம் வாரம்.

எட்டாவது,—நாலில் பெருக்கி பனிரெண்டில் கழித்து மிகுந்த சேடம் ராசி

ஒன்பதாவது,—ஒன்பதில பெருக்கி நாலில் கழித்து மிகுந்த சேடம் அம்சம்.

பத்தாவது,—நாலில் பெருக்கி ஒன்பதில் கழித்து மிகுந்த சேடம் ‡ அமிசம்.

பதினோராவது,—இருபத்தேழில் பெருக்கி நூறில்கழித்து மிகுந்த சேடம் வயது.

ஆடி பொருத்தம் கக-க்கு,

0 யோனி-கருடன்-பூனை-சிங்கம் - நாய்-பாம்பு-எலி-ஆனை-முயல் இதில் ஆனை-சிங்கம்—உத்தமம்.

‡ அமிசம்-சோரம்-சக்தி - தானியம்-ராச்சியமக்லீபம்-விருத்தம்-ரோகம்-சுபம். இப்படிக்கிரமமாகப்பார்க்கவும். இதில் உ-ரு-அ கூ-உத்தமம். மற்றவையாகாது.

ஆயகமீராமற்போனால் அ—வைத்துக்கொள்ளவும்.
ஆதாயமீராமற்போனால் கஉ—வைத்துக்கொள்ளவும்.
விரையமீராமற்போனால் க0—வைத்துக்கொள்ளவும்.
யோனிமீராமற்போனால் அ—வைத்துக்கொள்ளவும்.
நாள்மீராமற்போனால் உஎ—வைத்துக்கொள்ளவும்.
திதிமீராமற்போனால் ௩0—வைத்துக்கொள்ளவும்.
வாரமீராமற்போனால் எ—வைத்துக்கொள்ளவும்.
இராசிமீராமற்போனால் கஉ—வைத்துக்கொள்ளவும்.
வமிசமீறாமற்போனால் ச—வைத்துக்கொள்ளவும்
அம்சமீராமற்போனால் கூ—வைத்துக்கொள்ளவும்.
வயதுமீராமற்போனால் க0ுப—வைத்துக்கொள்ளவும்.

ஆதாயம் அதிகப்பட்டு, விரையம் குறைவாயிருந்தால் வீட்டுக் குடையவன் தனவானுவான்,

ஆதாயங் குறைவாயிருந்து விரையமதிகமாயிருந்தால் தரித்திரனுவான்

ஆதாயமும் விரையமும் சரியாயிருக்கில் சமனுயிருக்கும்,

முதல்பதமென்கிற துருவ ஆயகத்தை அ-ல் கொடுக்க மிதுந்த தொகையை வைத்துக்கொண்டு.

க-வந்தால் துவசாயம்—இந்திரன்—காரியசித்தி
உ-வந்தால் தூமாயம்—அக்கினி—மரணம்.
௩-வந்தால் சிம்மாயம்—யமன்—ஜெயம்.
ச-வந்தால் சிவனுயம்—நிருதி—ரோகம்,
ரு-வந்தால் ரிஷபாயம்—வருணன்—ராச்சியம்,
சூ-வந்தால் சானுயம்—வாயுவு—துக்கம்,
எ-வந்தால் கெசாயம்—குபேரன்—சுபம்,
அ-வந்தால் காகாயம்—ஈசானியம்—நிஷ்பலம்,

துவசாயத்துக்கு வடக்கே கட்டலாம்,
சிம்மாயத்துக்கும் கெஜாயத்துக்கும் மேற்கே கட்டலாம்,
ரிஷபாயம் மேற்கேயல்லாமல் மற்ற விடங்களில் கட்டக்கூடாது,

துவசாயம் அக்கினிமூலையிற்றவிர, மற்றஎந்ததிக்கிலும்கட்டக் கூடாது,

மற்ற எந்த திக்கிலே கட்டியிருக்கிறதோ அந்தப்பிரகாரமே யிருக்கலாம், மற்றொரு விடங்களிலுங் கட்டக்கூடாது,

துவசாயம்-ரிஷபாயம்-சிம்மாயம்-பிராமணுளுக்கும், க்ஷத்திரியாளுக்குமாகும்,

கெஜாயம்-ரிஷபாயம் வைசியர்களுக்கும், சூத்திரர்களுக்குமாகும், துவசாயம் நல்லபுண்ணியவானுவான்,

தூமாயம்—மிருத்துபிரதம்.
சிம்மாயம்—விஷப்பிரதம்
சிவநாயம்—ரோகப்பிரதம்
ரிஷபாயம்—இராட்சதப்பிரதம்.
கெசாயத்துக்கு—சுபப்பிரதம்.
காகாயத்துக்கு—விஷபயம்.

காகாயத்துக்கும் பீடையாம். இந்த ஆயங்களில்குணங்தெரிந்தவர்க்கு ஆயங்கள் நிர்ணயம்பண்ணும்போது ஒரு அங்குலமதிகமானுல் பூரணுயுள் பலன் அறியவும். ஸமமாயிருந்தால் சமபலனுயிருக்கும் அங்குலம் குறைவாயிருந்தால் குணஸ்தனென்றறியவும் இந்த ஆயங்களில் குணங்கள் தெரிந்துக்கொள்வதாம்.

மரமறிய.

அம்பலத்தில் நின்றமரம், தீயில்வெந்தமரம், பட்சிகள் வாழ்ந்தமரம், புள்ளிருந்தமரம், கொடிசுற்றியமரம், குளக்கரையில் நின்றமரம், யானைமுரித்தமரம், காற்றினுல் முறிந்தமரம், பறச்சேரி சுடுகாடு பாழ்வீடு தேவற்றில்நின்றமராம், பேய் பூதம் குடியிருந்தமரம. வில்வமரம் - விளா-புளி-வேங்கை-புங்கு-மாவிலிங்கை-அத்தி - புன்னை-நொச்சி இவைகளும், முளைமரங்களும் தீதாம்.

மரங்களைவெட்ட திதி நிர்ணயம்

பஞ்சமிமுதல் ஐந்துநாளில் வெட்டினுல் பூச்சிபிடியாது இவ்வைந்துநாளேயில் ரோகணிநட்சத்திரத்திலானுல் மிகவுமுத்தமம் வேலமரம்வெட்டினுலும், பூச்சிபிடியாது, இதற்குஆகாநாள் கிர்த்திகை நட்சத்திரத்தில் சூரியனிருக்க, திருவோணம்-அவிட்டம் மூன்றும் பாதத்திலும் நாலாய்பாதத்திலும், சதயம்-பூரட்டாதி மூன்றும்பாதத்திலும் சுக்கிரநிற்க, மரம்வெட்டலாகாது.

முன்புவெட்டின மரங்களானுலும், இந்நட்சத்திரத்திலும் இவர்களிருக்கும்போதும் வீட்டுக்குக்கொண்டுவரக்கூடாதுபின்புதிருவோணம்-அவிட்டம்-சதயம்-பூரட்டாதி-உத்திரட்டாதி-மகம்-பூரம்

உத்திரம்-அஸ்தம்-சித்திரை-சுவாதி-இந்த-சுச-நட்சத்திரத்திலும் சந்திரனிருக்க மரம்வெட்டலாகாது, வெட்டின மரங்களானாலும் வீட்டுக்குக் கொண்டுவரக்கூடாது.

மரங்கள் வெட்டும்விதி

வாரம்-யோகம்-கரணம் இவைகளையறிந்து கர்த்தனுக்கும் சந்திரதாரபலன் பார்த்துக்கொண்டு தச்சனுக்கு கெந்தம்-தாம்பூலம்-புட்பம் தட்சணைகொடுத்து காட்டுக்கனுப்பி மரம்வெட்டினால் சுபமுண்டாகும்,

வீடுகட்டுதற்குதவாமரங்கள்

காற்றிலடிபட்டு வீழ்ந்தமரம், ஆலயத்திலிருக்குமரம், மயானத்திலிருந்தமரம் இவ்வகைப்பட்டமரங்களால் வீடுகட்டிடஞ் செய்தால் செல்வங்குறைந்து ஆயுள்ஜீரணித்து வம்மிஷம் நாசமாகும்.

மரமிசைத்தல்.

மரமிசைக்கும்போது முதுதலைகீழாகவும் இளந்தலை மேலாகவும் ஓரஇசையாகில் முதுதலையுள்ளும் இளந்தலைபுறத்தியுமாக இசைப்பதுநன்று இதற்குப் பிசகுவருமாகில் பிணியுங்கேடுங் கடனுமுண்டாம். இளந்தலைகீழும் முதுதலைமேலுமாக இசைப்பாராகில் நோயுண்டாகும்.

முதுதலை இரண்டுந்தென்மேல் மூலையில் பொருந்த வைத்து தென்றிசை முதுதலைமேலாகவும் இளந்தலையிரண்டும் வடதிசை மூலையிற் பொருந்தவைத்து வடதலைகீழாகவும் பிணைக்கவுத்தமம்

இளந்தலையிரண்டும் வடகீழ்மூலையொழிய வேறிடத்திலிசைக்கலாகாது முதுதலையிரண்டும் தென்மேல்மூலையிலே யொழிய மற்றவிடங்களிலிசைக்கலாகாது இசைக்கில்வறுமையும்நோயுமுண்டாம்

பறப்பினிற்பாதியைப் பனிரண்டுகூறுசெய்து இதிலெந்துகூறு ஏற்றமஞ்சு ஆறுமஞ்சாகை ஏழுநடுவாங்கை எட்டுமேரமிசைக்க கோடாகை ஒன்பது கோடியென்பதாம்.

திங்களில் காலேநாட்டி, புதனிற்கையைவைத்து வெள்ளியில் மேய்ந்து வியாழத்திற்குடிபுகுந்தால் தேவேந்திரன்போலே அஷ்டஐசுவரியமும்பெற்று நீடூழிகாலஞ்செல்வம் நீங்காமல் கீர்த்தியுள்ளவனாக வாழ்வான்.

ஆண்மரம்

மரமானது தூண்போலத்திரண்டு நீண்டு ஒழுங்காக விருக்குமாகில் ஆண்மரமென்று சொல்லப்படும்.

பெண்மரம்,

மரமானது அடிபெருத்து நுனியானதுசிறுத்திருந்தால் அதை பெண்மரமென்று சொல்லப்படும்.

அலிமரம்

மரமானது சிறுத்துநீண்டு நெடுமையாகித் தலைபெருத்திருந்தால் அதை அலிமரமென்று சொல்லப்படும்.

ஆண்மரமாகில் கால்களுக்கும் தூணுக்குமாகும் பெண்மரமாகில் வலை உத்திரம் போதிரைக்குமாகும் அலிமரமாகில் விட்டம் சட்டத்திற்குமாகும் கைகளுக்கு உத்தமமரங்கள் நன்று.

மாமரம் தேவர்களுக்காகும் வேம்பு பிராமணர்களுக்காகும் தேக்கு அரசர்களுக்காகும் இலுப்பை செட்டிகளுக்காகும். வேங்கை வேளாளருக்காகும்.

பதவி

காலிநிலத்தில் தேவாலயமுதலிய கிருகங்களெடுக்க வேண்டிய போதுவாஸ்து, பதம்-கூ-சு-போட்டு பதவின்யாசம்செய்துவாஸ்து ஹோமம், வாஸ்துபூசை, வாஸ்துபலி, வாஸ்துசாந்தியும்விதிப்படிசெய்துமுகூர்த்தம் செய்யவும்.

வீடுகட்ட மண்

வெள்ளைமண்—பிராமணர்களுக்கு பலமணமுள்ளது.
சிவந்தமண்—அரசர்களுக்கு பூமணமுள்ளது
பசுமண்—அல்லது, களிப்புமண்—வைசியருக்கு வேர்மணமுள்ளது
கருமண்—சூத்திரருக்கு நீர்மணமுள்ளது.

தோஷநிவர்த்தி குத்தல்கள்

கோவில் பாய்ச்சல், வீட்டுபாய்ச்சல், சந்துபாய்ச்சல், வயல் பாய்ச்சல், கோடிக்குத்தல, குளக்குத்தல்,ஆற்றுக்குத்தல், கிணற்றுக் குத்தல் சந்துகுத்தல் இவைமுதலிய தோஷங்கள்நூறு அடிக்குமேலாயின் யாதொரு தோஷமுமில்லை.

முகூர்த்தஞ்செய்யுமிடம்.

மனைமுகூர்த்தஞ்செய்ய வாஸ்துபுருஷன் காலிற்கெல்லில் ஸ்ரீமரணம். முதுகிற்கெல்லில், பொருள்சேதம், தலையிற்கெல்லில்தாய்தந்தைமரணம், வயிற்றிற்கெல்லில் பொருள்சேரும்.

தோஷம்

மனைநடுவில வாசல்விடுதல், நடுதான்யகர்ப்பம், நடுஉத்திரம் வைத்தல், கிணறுஎடுத்தல், அடுப்புஇயற்றில்கூடாது. ஒற்றைக்கம்பம் ஒற்றையுத்திரம், தோணிமத்தியிலுத்திரம், நிலைவாசல்வாரைக்குத்தல், வாசற்படிக்குநேர், வாரைச்சலம்விழுதல், சாலகம்விடுதல் மண்படைவைத்தசுவர், இரட்டைப்படை ஆகாதுகைஒற்றைப்படலாகாது.

முத்தம் நடுவில் கப்பம் உத்திரம் சுவர் வரலாகாது.

மனைசெய்யவேண்டுமென்று சிற்பாசாரியை அழைக்கவந்தவர்கள் நின்று ஒருகாலைத்தூக்கிநிற்றல், காலினால் காலைச்சொரிதல்தலையைச்சொரிதல், முழங்காலைக்கட்டிக்கொண்டிருத்தல் கன்னத்தில் கையைவைத்திருத்தல், முகஞ்சோர்ந்திருத்தல், துக்கவார்த்தைப் பேசுதல், அகாலத்திலழைத்தல், அவனழைக்கும்போதுசிற்பாசாரி எண்ணெய்யிட்டுக் கொண்டிருத்தல் இவையாகில் அந்தமனை நிறைவேறமாட்டாது திரவியநஷ்டமாம்,

குளிகைகாலம் பார்க்கவேண்டிய விபரமாவது

எந்தவாரத்தில் குளிகைகாலம் பார்க்கவேண்டுமோ அந்தவாரமுதல் சுக்கிரவாரம்வரையில் எண்ணினதொகையை ௩¾-னால் மாறிக்கண்டநாழிகையை இத்தனையென்றுணர்ந்து அந்தநாழிகைக்குமேல் ௩¾-நாழிகை குளிகைகாலமாம். அக்காலத்தில் மனைமுகூர்த்தஞ்செய்ய ஊரேற்ற, கால்நாட்ட, வாகனரோகஞ்செய்ய தானியக்களஞ்சியங்கட்ட இதுமுதலாகிய சுபகாரியங்களைச்செய்ய சுபகரமுண்டாம்.

நிலைநீளத்தை ௭-கூறுசெய்து ௬-கூறு உள்ளும், நின்ற ஒரு கூறும் ௯- பங்குசெய்து மேல் ௫-ம், கீழ் ௪-ம் உட்கூட்டில்பாதியாகக்

கூறுசெய்து நிறையாகநின்ற கூறில் நிலைமையந்தன்னில் சரியாய் வைக்கில் மிகவும்நன்று,

பூதபலன்

அகலநிகளமளந்து குழியான துருவபதத்தை ௩-ல் பெருக்கி, ௫-ல் கொடுக்க,

க-மிருந்தால் பூதத்துவம் இதன்பலன் பாக்கியப்பிரதம்.
உ-மிருந்தால் உதகதத்துவம் இதன்பலன் சந்தோஷம்
௩-மிருந்தால் அக்கினிதத்துவம் இதன்பலன் மிருத்துவுபயம்,
௪-மிருந்தால் வாய்வுதத்துவம் இதன்பலன் சுகம்.
௫-மிருந்தால் ஆகாசதத்துவம் இதன்பலன் தரித்திரம்.

இராசிகூல நிர்ணயம்

ஷை துருவபதத்தொகையை ௯-ல் பெருக்கி, கஉ-ல் கொடுக்க.

க—மிருந்தால் மேஷம்.	எ—மிருந்தால் துலாம்.
உ—மிருந்தால் ரிஷபம்.	அ—மிருந்தால் விருச்சிகம்
௩—மிருந்தால் மிதுனம்	௯—மிருந்தால் தனுசு.
௪—மிருந்தால் கடகம்.	க0—மிருந்தால் மகரம்.
௫—மிருந்தால் சிங்கம்	கக—மிருந்தால் கும்பம்
௬—மிருந்தால் கன்னி.	கஉ—மிருந்தால் மீனம்.

இதில்எந்தத்தொகைவருமோ அந்தத்தொகையைநாலுபாதமுள்ள நட்சத்திரத்துக்கு பின்ராசியில் ௩-பாத மெவ்விராசிக்கு வருகின்றனவோ அவ்விராசிபலன் கேடாகும்.

A மேற்கூறிய விதியின்படிக்கும் பொருத்த நிமித்தம் முதலியதும் மனைகளினது நேத்திரம் வாஸ்து இவைகளையெல்லாம்நிச்சயித்தும் அந்தந்தப்பலன்களைத் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்பது கருத்தாம்.

மனைமுதலிய வீடுகளுக்குண்டாகும் லாபநஷ்ட பலன்களைக் கீழேகூறுவோம்.

மனையானது கிழக்கு முகமா விருந்தும்.தென்மேற்குச் சற்றுள்ள மனையாகினும் கிரகத்துள் வட்பாகங்களில் நான்குமுதலிய அவரையுள்ள நிலமுதலிய சன்னல்துவாரமேனுமிருக்கினும் எதிர்ப்

இலக்கினம்	விருஷபலக்கினம்
அமிசம்	நிதனம்சம்
வமிசம்	அரசவம்சம்
நேத்திரம்	குருட்டுநேத்ரம்
சூத்திரம்	குமாரசூத்ரம்
வயது	70
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

குழி 1011-இ—பொருத்தம்.

கருப்பம்	3
ஆதாயம்	12
விரையம்	9
யோனி	த்வஜயோனி
வாரம்	சுக்கிரவாரம்
திதி	அமரபட்சநவமி
நட்சத்திரம்	சுவாதி
இலக்கினம்	தநுசுலக்னம்
அமிசம்	சத்தியம்சம்
வமிசம்	வசியவம்சம்
நேத்திரம்	குருட்டுநேத்ரம்
சூத்திரம்	மரணசூத்திரம்
வயது	97
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமென வறிக

குழி 1012-இ—பொருத்தம்.

கருப்பம்	4
ஆதாயம்	8
விரையம்	8
யோனி	சுவானயோனி
வாரம்	ஆதிவாரம்
திதி	அமரபட்சதிரயோதசி
நட்சத்திரம்	அவிட்டம்
இலக்கினம்	கடகலக்னம்
அமிசம்	நிர்பீதியம்சம்
வமிசம்	சூத்ரவம்சம்
நேத்திரம்	உபயநேத்ரம்
சூத்திரம்	அரசசூத்ரம்
வயது	24
யோகம்	மரணயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமென வறிக.

குழி 1013-இ—பொருத்தம்

கருப்பம்	5
ஆதாயம்	4
விரையம்	7
யோனி	கஜயோனி
வாரம்	மங்களவாரம்
திதி	பூர்வபட்சதுதியை
நட்சத்திரம்	உரோகணி
இலக்கினம்	கும்பலக்னம்
அமிசம்	புத்தியம்சம்
வமிசம்	பிரமவம்சம்
நேத்திரம்	குருட்டுநேத்ரம்
சூத்திரம்	விருத்தசூத்ரம்
வயது	51
யோகம்	அமிர்தயோகம்
பஞ்சகம்	அக்னிபஞ்சகம்

தாராபலமென வறிக.

குழி 1014-இ—பொருத்தம்.

கருப்பம்	6
ஆதாயம்	12
விரையம்	6
யோனி	புகையோனி
வாரம்	குருவாரம்
திதி	பூர்வபட்சசஷ்டி
நட்சத்திரம்	உத்திரம்
இலக்கினம்	கன்யாலக்னம்
அமிசம்	இலுபாம்சம்
வமிசம்	அர்சவம்சம்
நேத்திரம்	குருட்டுநேத்ரம்
சூத்திரம்	குமாரசூத்ரம்
வயது	78
யோகம்	மரணயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமென வறிக

குழி 1015-இ—பொருத்தம்

கருப்பம்	7
ஆதாயம்	8
விரையம்	6
யோனி	வ்ருஷபயோனி
வாரம்	சனிவாரம்
திதி	பூர்வபட்சதசமி
நட்சத்திரம்	பூராடம்
இலக்கினம்	மேஷலக்னம்
அமிசம்	தஸ்கராம்சம்
வமிசம்	வசியவம்சம்
நேத்திரம்	குருட்டுநேத்ரம்
சூத்திரம்	மரணசூத்ரம்
வயது	5
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	அக்னிபஞ்சகம்

தாராபலமென வறிக

குழி 1016-இ—பொருத்தம்

கருப்பம்	8
ஆதாயம்	4
விரையம்	4
யோனி	காகயோனி
வாரம்	சோவாரம்
திதி	பூர்வபட்சசதுர்த்தசி
நட்சத்திரம்	அசுவினி
இலக்கினம்	விருச்சிகலக்னம்
அமிசம்	ரபதியம்சம்
வமிசம்	சூத்ரவம்சம்
நேத்திரம்	குருட்டுநேத்ரம்
சூத்திரம்	பாலசூத்ரம்
வயது	32
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமென வறிக

மனை பொருந்தம் பார்க்கவேண்டிய விபரம்

இப்போது நமது நாட்டை யாண்டுவரும் ஆங்கிலேய துரைத் தனத்தாருடைய கணக்குப்படி கஉ - அங்குலங்கொண்டது ஒரு ஜாதி அடி. அந்த அடி ௩ -கொண்டது ஒரு கோல், அந்தக்கோலி னால் அகலங்களக்களை மாறிய தொகைக்கு குழியென்றும்பெயர். அந்த குழியின்விபரம் ௬ - முதல் கOகசு-வரையிலும். மேலேகண்டிருப்பதால் அந்தப்பொருத்தங்கள் அவரவர்கள் மனையாயத்திற்குச் சரிப்படா விட்டால் பின்னால்வரும் சரியான பொருத்தங்களைப்பார்த்துச்

மனை அகலம்வைக்கவேண்டிய அடிகளின்பலன்.

6—ஞ் நன்மை.
7—ஞ் மத்திமம்.
8—ஞ் இராச்சியம்பண்ணும்.
9—ஞ் திரு கெடும்.
10—ஞ் பாலுஞ்சோறும்உண்டு.
11—ஞ் புத்திரசம்பத்துண்டு
12—ஞ் பிள்ளையில்லாமல்போம்.
13—ஞ் வியாதியுண்டாம்.
14—ஞ் நித்தம்பகை,
15—ஞ் ஸ்திதிவாங்கும்,
16—ஞ் செல்வமுண்டாம்.
17—ஞ் நாளுக்குநாள் ஆக்கம்.
13—ஞ் நஷ்டங்காட்டும்
19—ஞ் புத்திரவியாகூலம்.
20—ஞ் இனஞ்சேரும்.
21—ஞ் இருப்புக்குலைந்துபோம்.
22—ஞ் எதிரிஅஞ்சுவான்.
23—ஞ் அடுத்தடுத்துநோயுண்டாகும்.
24—ஞ் மனையாள்சாவாள்.
25—ஞ் திருவாழு.
26—ஞ் சம்பத்துண்டாம்.
27—ஞ் அரசாளும், ஆதாயமுண்டு
28—ஞ் ஐஸ்வரியமுண்டாம்.
29—ஞ் சுற்றம்பெருகும்.
30—ஞ் நோயுண்டாம்
31—ஞ் மனையாள்சாவாள்

32—று இழந்தபொருளெய்தும்.
33—று பதியிரண்டுண்டாம்.
34—று குடியோட்டும்.
35—று ஜீவனமுண்டாம்.
36—று சுகமுண்டாம்.
37—று கன்றுகாலிவிர்த்தியாகும்.
38—று நினைத்தகாரியம் கூடாது.
39—று ஆக்கமுண்டாம்.
40—று எதிரிகளாலெந்நேரமும்தீமை.
41—று குபேரசம்பத்துண்டாம்
42—று லெட்சுமிகுடிகொண்டிருப்பாள்.
43—று வஞ்சகமுண்டாம்.
44—று கண்மறைவாய்க்காட்டும்.
45— சற்புத்திரனைபெறுவர்.
46—று வீடுவிட்டோட்டும்.

வீடுகட்ட ஆகாதநக்ஷத்திரம் அசுவனி, ரேவதி, மகம், பூரம், இவைகளாம்.

சூரியன்சாயலைக்கொண்டு அடியளந்து

நாழிகைஅறிவது.

முற்பகலில் பார்ப்பது.		பிற்பகலில் பார்ப்பது.	
அடி.	நாழிகை,	அடி.	நாழிகை,
௭௮	௧	௧	௧௬
	௨	௨	௧௭
௨௪	௩	௩	௧௮
௧௬	௪	௪	௧௯
௧௩	௫	௫	௨0
௧௧	௬	௬	௨௧
௯	௭	௭	௨௨
௮	௮	௮	௨௩
௭	௯	௯	௨௪
௬	௧0	௧௧	௨௫
	௧௧	௧௩	௨௬
	௧௨	௧௬	௨௭
௩	௧௩	௨௪	௨௮
௨	௧௪	௪௪	௨௯
	௧௫	௭௮	௩0

உ

பரமபதிதுணை.

பூமி சல்லியம்.

அச்சுவினி	பரணி	கார்த்திகை.	உரோகணி	மிருகசீரிஷம்.	விசாகம்	அனுஷம்.
ரேவதி.	ஆயிலியம்.	பூசம்.	புனர்பூசம்.	திருவாதிரை.	சுவாதி,	கேட்டை.
உத்திரட்டாதி	மகம்	பூரம்.	உத்திரம்.	அஸ்தம்	சித்திரை,	மூலம்.
பூரட்டாதி	சதையம்	அவிட்டம்.	திருவோணம்.	அபிஜித்து	உத்திராடம்.	பூராடம்

கட்டளைக் கலிப்பா

வினவும் போதிலடியை யளந்துமே
  மிக்கநா லேழுகூட்டியத னுடன்
தனியும் போதி லுதிக்கின்ற ராசியுந்
  தானுஞ் சேர்த்து ஈராறிற்பெ ருக்கியே
கனிவதாகத் தொகைபதி னாறினிற்
  காண வீய்ந்துதான் கண்டதோர் சேடத்தை
தனிவு கண்டதோர் வீமேசர் பாதத்தைச்
  சார்ந்து தானும் பலன்கண் டுரைப்பதே.

யாவரேனும் சல்லியம் கேட்கும்போது அடியளந்து அவச்சாயை பாதச்சாயை நீக்கி நின்ற அடித்தொகையுடனே உஅ - ஒருதொகையும் மேஷம்முதல் உதயலக்கினம் வரையிலும் ஆகிய தொகை ஒன்றும் சேர்த்து கஉ-ல் பெருக்கி கசு - இ ஈந்துநின்ற சேஷத்தைக்கொண்டும் சேஷம் நில்லாதவிடத்து பெறுவானுய்நின்ற கசு - யே கொண்டும் சல்லியம் சொல்லலாம்,

சல்லியம் கசு வகைக்கும் விபரமறிய.

தலைமண்டை, எலும்பு, செங்கல், ஓடு, அடுப்பு, விக்கிரகம், சாம்பல், கரி, பிணம், தானியம், பொன், கல், தேரை, விலங்கின் கொம்பு, நாய், ஜாடி, இவைகள் சல்லியமாம்.

சல்லியத்திலே நன்மை தீமை அறியும்வகை.

முற்கூறிய சல்லியகணிதத்தினாலே சேஷம் என்றும், சேஷம் இல்லாதவிடத்துப் பெறுவானும்நின்ற கக- என்றும், எடுக்கப்பெற்ற க-முதல் கக- வரையிலும் ஆகிய தொகையின் முறையே பிற்கூறிடும் தலைமண்டைமுதல் ஜாடி வரையிலும் ஆகிய சல்லியம் கக-யும் வைத்து எண்ணிக்கண்ட சல்லியம் எதுவோ? அதுவே கேட்பவர்க்குச் சொல்லவேண்டிய சல்லியமாம். அச்சல்லியமானது தானியம், பொன், விலங்கின்கொம்பு, இம்மூன்றுள் ஒன்றுகாணில் நல்லனவாம். மற்றுமுள்ள கஉ-உள்ஒன்றுகாணில் தீயனவாம். வரலாறு, க-வது தலைமண்டை, உ-எலும்பு, ந-செங்கல், ச-ஓடு, ரு-அடுப்பு, சு-விக்கிரகம், எ-சாம்பல், அ-கரி, கூ-பிணம், கO-தான்யம, கக-பொன், கஉ-கல், கந-தேரை, கச-விலங்கின்கொம்பு, கரு-நாய், கசு-ஜாடி, என்பதற்கு சல்லியம் அந்நிலத்தில் இல்லையென்றும பொருளமைத்துக் கொள்க.

சல்லியம்வினவினமனையின் அநுபவமென்றறிய

கண்டங்களிலே நின்ற சுபக்கோட்களை பாவக்கோட்கள் கூடி நிற்கினும் நோக்கினு ம் சல்லியம் வினவின மனையையுடையவனுக்கு நினைத்தகருமம் முடியாது. அந்தமனையின் ஆக்ஷியுமில்லாமல் போம், அவன்வறுமையிலே துன்பப்படுவான். கண்டங்களிலேசுபக்கோட்களின்றிப் பாபக்கோட்கள்நிற்கினும் அவற்றைநோக்கினும் தீமையுண்டாம். கண்டங்களிலே பாபக்கோட்களின்றிச் சுபகோட்கள் நிற்கினும் அவற்றைநோக்கினும் நன்மையுண்டாம்.

மேற்கூறியவற்றுள்ளே நன்மைப்பலனை

மென் மேலாக விவரிக்கின்றதென்றறிக.

கண்டங்களிலே பாபக்கோட்களின்றிச் சுபக்கோட்கள் நிற்கினும் அவற்றைநோக்கினும் மனைவளப்பமும் செல்வமும் அதிகரிக்கும், மனையின் ஆக்ஷியுமுண்டாம்.

மேற்கூறிய நன்மை தீமைகள் என்னும்

அனுபவத்தை வேறோருவகையாலறிய.

உச்சிகண்டத்திலே சுபக்கோட்கள் நிற்கினும் அதனைநோக்கினும் அம்மனையைத்தானே அனுபவிப்பன், பாவக்கோட்கள் நிற்கினும் அதனைநோக்கினும் பிறர் அனுபவிப்பர், அல்லது தெய்வம் பசாசம் இராக்ஷசம் இவைகள் அனுபவிக்கும்.

சல்லியவிருப்பிடத்தைக் கிருத்திகையைக்கொண்டு கூறுவதேபோல் மற்றெல்லா நாட்களையுங் கொண்டு கூறுவதென்றறிய.

கிருத்திகைமுதலாகக்கொண்டு அடைத்த முற்பகற்சக்கரத்திற் சந்திரன்நின்ற நாளறையிலே சல்லியம் இருப்பனபோல அக்கிருத்திகையும் மற்றைய ௨௬-நாட்களும்ஒருநாழிகைக்குஒவ்வொன்றாக உதிக்கும்,இயல்பிற்றாதலால்! அங்ஙனம் உதித்தரோகணிமுதலிய ௬-நாட்கள் முதலாகக்கொண்டு அடைக்கவேண்டிய முற்பகற்சக்கரத்திலும், மகம் முதலிய ௭-நாட்கள் முதலாகக்கொண்டு அடைக்கவேண்டிய பிற்பகற் சக்கரத்திலும், அனுஷம் முதலிய ௭-நாட்கள் முதலாகக் கொண்டு அடைக்கவேண்டியமுன்னிரவுசக்கரத்திலும், அவிட்டம் முதலிய ௭-நாட்கள் முதலாகக்கொண்டு அடைக்கவேண்டிய பின்னிரவுசக்கரத்திலும், சந்திரன்நின்றநாள் அறையிலே சல்லியம் இருப்பனவாகத் தெரிந்துகொள்ளப்படும்.

சல்லியச்சக்கரமும் சல்லியவிருப்பிடமும் சல்லியவடைப்புர் நான்முதற்குறிப்புமென்றறிய.

கிழக்கு மேற்கு ௪-அறையும், தெற்கு வடக்கு ௭-அறையுமாக வரையப்படாநின்ற சல்லியச் சக்கரத்தின் அறை ௨௮-னுள்ளும் சந்திரன் நின்றநாளறையிலே சல்லியம் இருப்பனவாம். ஆதலால் அச்சந்திரன் நின்ற நாளறையை அறிவதற்குகிருத்திகை முதலாகக்கொண்டு அடைத்து வழங்கிவருகிற சல்லியச்சக்கரத்தைச் சாங்கோபாங்கமாகத்தானே தெரிந்துகொள்ளப்படும். அபிசித்து சேர்த்தெண்ணவே நாட்கள் ௨௮-ஆம்.

சல்லியவிருப்பிடத்தை மேலேதன்னுதயநாட்களையுங்கொண்டுகூறியதேபோல் இராசி உதயநாட்களையுங்கொண்டு கூறலாமென்றறிய.

இராசி ஒன்றிற்கு மும்மூன்றுநாட்கள் உடைத்தாதலால் உதித்தஇராசியினிடமாக உதித்தநாளை முற்பகற்சக்கரத்திலே கிருத்திகையை நிறுத்திவைத்ததுபோல நிறுத்தி அதனை அடைப்பினடை

வேதத்துக்குப்பின்னுள்ள மற்றய உள-நாட்களையும் அடைத்து சந்திரன்நின்ற நாளறையிலே சல்லியம் இருப்பனவாம் என்றுசொல்லப்படும்.

சல்லியம் உண்டு இல்லையென்பது உணர்த்தி

ஆட்டினெலும்பு உண்டென்றறிய

கண்டங்களிலேநின்ற சுபக்கோட்களைப் பாபக்கோட்கள் கூடிநிற்கினும் நோக்கினும் சல்லியம் உண்டென்றும் கூடிநிற்றலும் நோக்கலும் இல்லையாகிற் சல்லியம் இல்லையென்றும் கண்டங்களிலே நின்ற சந்திரனை அங்காரகன் கூடிநிற்கினும் நோக்கினும் அங்காரகன்நின்ற நாளறையிலே ஆட்டினெலும்பு உண்டென்றும் சொல்லப்படும்.

பார்ப்பாரெலும்பு பசுவெலும்பு அல்லது செங்கல் பொன் இவற்றுளொன்றுண்டென்றறிக

கண்டங்களிலேநின்ற சந்திரனைக் குருகூடிநிற்கினும் நோக்கினும் குருநின்றநாள் அறையிலே பார்ப்பாரெலும்புபசுவெலும்பு அல்லது செங்கல் பொன் இவற்றுள் ஒன்று உண்டென்றுசொல்லலாம்.

விக்கிரகம் எருமையெலும்பு உண்டென்றறிய

கண்டங்களிலேநின்ற சந்திரனைச் சூரியன் கூடிநிற்கினும்நோக்கினும் சூரியன்நின்ற நாளறையிலே விக்கிரகம் உண்டென்றும் சனிகூடிநிற்கினும் நோக்கினும் சனிநின்ற நாளறையிலே எருமையெலும்பு உண்டென்றும் சொல்லலாம்.

பாம்பாதல் புற்றாதல் பாம்பினெலும்பாதல்என்றறிய.

கண்டங்களிலே நின்ற சந்திரனை பாம்புகூடிநிற்கினும் நோக்கினும் பாம்புநின்ற நாளறையிலே பாம்பாதல் புற்றாதல் பாம்பினெலும்பாதல் உண்டென்று சொல்லப்படும்.

நாயெலும்பு உண்டென்றறிய.

கண்டங்களிலே நின்ற சந்திரனை புதன்கூடிநிற்கினும் நோக்கினும் புதன்நின்றநாள் அறையிலே நாயெலும்பு உண்டென்றும் சுக்கிரன் கூடிநிற்கினும் நோக்கினும் சுக்கிரன்நின்ற நாளறையிலே வெள்ளியுண்டென்றும் சொல்லப்படும்.

சல்லியசக்கரத்தின் அடைப்புவிதியு முற்பகல் பிற்பகல் முன்னிரவு பின்னிரவு ஆகிய இவற்றின் அடைப்பு நாட்களும்நாட் களின் நாழிகைகளும் இருந்துபார் க்கும் திசையுமென் றறிய.

கீழறை ௭-னுள் முதலிலே இரண்டறைவிட்டு மூன்றும்அறை முதல் தெற்குநோக்கு மூன் றுஅறையும் அதற்கு மேலறைமுதல்வட க்குநோக்கி நான்கறையும் அதற்குமேலறைமுதல் தெற்கு நோக்கி ஐந்தறையும் அதற்கு கீழறைமுதல் கிழக்குநோக்கி ரெண்டறையும் உடனே வலம்சுழலத் தென்கீழறைமுதல் ௧௬-அறையுமாக எண்ணி. முறையே முற்பகற்குக் கிருத்திகை முதலாகக்கொண்டு அடைப்ப தாம். பிற்பகற்கு மகமும் முன்னிரவுக்கு அனுஷமும்பின்னிரவுக்கு அவிட்டமும் முதலாகக் கொண்டு அடைப்பதென்றும் ஒவ்வொரு நாட்கு நாழிகை ரெண்டே அரைக்கால் என்றும் சூரியன் வலமுற் றிருப்பதே இருந்துபார் க்கும் திசையென் றும் அறியப்படும். முற்ப கற்கு மேற்குமுகமும், பிற்பகற்கு கிழக்குமுகமும், முன்னிரவுக்கு வடக்கு முகமும், பின்னிரவுக்குத் தெற்குமுகமும், இருந்து பார்க் குந் திசையாம். பிற்பகற்கு வடக்குமுகமும், முன்னிரவுக்குக் கிழக் குமுகமும் இப்படி என் று பட்சாந்திரங்களிலே சொல்லப் படுவன வும் சிலருளர்.

சல்லியம் இருத்தலின் ஆழங்குறி யென் றறிய

சல்லியம் எவ்வெவ்கோட்களால் நியமிக்கப்பட்டனவோ அவ் வவ்கோட்களின் கதிர் எத்தனையுண்டோ அத்தனையும்காணுதலால் சாண் ௨-கொண்டது முழமாம் என்கிறவகையிலே எண்ணிய வட் டம் முழமாகவும் சேஷித்துநின்றது, உள்ளபடியே சாணாகவும் கொ ண்டு நட்பாக்ஷி யுச்சம் பகைநீசத்திலே ஏறுவன குறைவனஅறிந்து இத்தனைமுழம் இத்தனைசாண் ஆழத்திலே இருக்கிறது என் று சல் லியம் இருத்தலின் ஆழம் குறிக்கப்படுஞ் சல்லியம் வினவின மனை யின் அகலநிகளங்களைத் தனித்தனியே சிறுகோலால் அளந்து அத் தொகை இரண்டினையும் ஒன் றிலே ஒன்றாகப்பெருக்கி ௨௮ - க்கு ஈந்தவட்டம் முழமாம் மீந்தசேஷத்தை ௧௨-ற் பெருக்கி ௨௮ - க்கு ஈந்த வட்டம் சாணும் மீந்த சேஷத்தை ௪-ற் பெருக்கி ௨௮ - க்கு ஈந்தவட்டம் அங்குலமாம், இவ்வகையைக்கொண்டு முழமும்சாணு ம் அங்குலமும் எத்தனையாம் என் று அறிந்து இத்தனைமுழம் இத் தனைசாண் இத்தனை அங்குலமென் று சல்லியம் இருத்தலின் ஆழம் குறிக்கப்படும்.

கூபச்சக்கரபலன்.

விருத்தம்

நீர்காட்டுந் தலமதனைப் பன்னிருகூ றாக்கி
  நிகழ்த்துகின்ற ராசிதனைப் பிரமமேல் வைத்து
வார்காட்டும் வனமுலையாய் வலமிடமா யெண்ணி
  மதிவெள்ளி யெவ்விடமோ வவ்விடத்தில் நீராம்
பார்காட்டும் பாம்பாகிற் பழங்கிணரு மென்க
  பரிதிசனி செவ்வாயேல் நீரில்லை யென்க
சீர்காட்டும் புதனுகிற் கல்லென்று சொல்க
  செம்பொன்னே லற்பசல மென்கமட மயிலே.

நீர் உண்டென்பது பொதுவிதியாக உணர்த்தி உடனே மடங்கா நீர் உண்டென்றும் கீழ் நீர் உண்டென்றும் பிரித்துணர்த்து மென்றறிய.

உதயம், ஆரூடம், நீர்க்கீழ், ஆனவை, ரிஷபம், கடகம், துலாம் விருச்சிகம், மகரம், கும்பம், மீனம், இவைகளாகில் நீர்உண்டென்றும் அவற்றிற் சந்திரன் சுக்கிரன் இவர்கள் நிற்கினும் அவற்றை நோக்கினும் மடங்காநீர் உண்டென்றும் புதன் குரு இவர்கள் நிற்கினும் அவற்றைநோக்கினும் கீழ்நீர் உண்டென்றும் சொல்லப்படும்.

பேல்உணர்த்திய மடங்காநீரை வேறொருவகையினாலெடுத்துணர்த்தி நீரின்மையையுங் கீழூற்று மேலூற்றுகளையுடன் உணர்த்து மென்றறிய

உதயம் ஆரூடம் நீர்க்கீழ் இராசிகளிற் பாம்புநிற்கினும், அவற்றைநோக்கினும், மடங்காநீருண்டென்றும், சூரியன் அங்காரகன் சனி இவர்கள்நிற்கினும் அவற்றைநோக்கினும் நீர் இல்லை யென்றும் நீர்க்கோட்கள் ஆரூடத்தில் நின்று நீரில்லாதகோட்கள் கவிப்பில் நிற்கிற் கீழூற்றென்றும், நீர்க்கோட்கள் கவிப்பில்நின்று நீரில்லாத கோட்கள் ஆரூடத்தில்நிற்கில் மேலூற்றென்றும் சொல்லப்படும்.

மேலுணர்த்திய கீழூற்றுமேலூற்றுகள் மாறுபடாமாறு உணர்த்துமென்றறிய

பாம்பு உதயத்தில் நின்றவிடத்து நீர்க்கோட்கள் ஆரூடத்தில் நின்று நீரில்லாதகோட்கள் கவிப்பில் நிற்கில் மேலூற்றென்றும்நீர்க் கோட்கள் கவிப்பில்நின்று நீரில்லாதகோட்கள் ஆரூடத்தில் நிற்கில் கீழூற்றென்றும், இங்ஙனம் மாறுபடுத்திச் சொல்லப்படுவனவாம்.

ஊற்றுகட்கு புறநடை உணர்த்துமென்றறிய

உதயம் ஆரூடம் நீர்கீழ் ஆனவை நீரிராசிகளாய் அவற்றில்நீர்க்கோட்கள் நிற்கில் மேலூற்றென்றும், நீரில்லாதகோட்கள் நிற்கில் கீழூற்றென்றுஞ் சொல்லப்படும்.

மடங்கா நீர்கீழ்நீர் உணர்த்துமென்றறிய

கண்டங்களிலேநின்ற சந்திரனை குரு கூடிநிற்கினும் நோக்கினும் மடங்காநீர் உண்டென்றும் சுக்கிரன் கூடிநிற்கினும் நோக்கினும் கீழ்நீர் உண்டென்றும் சொல்லப்படும்.

மேல்உணர்த்தியமடங்காநீரை வேறொருவகையால் எடுத்துணர்த்தி உடனேபழங்கிணறு உணர்த்துமென்றறிய

கண்டங்களிலே நின்ற சந்திரனை பரிவேடம்கூடி நிற்கினும் நோக்கினும், மடங்காநீர் உண்டென்றும் புதன் குருகூடிநிற்கினும் நோக்கினும், பழங்கிணறுண்டென்றுஞ் சொல்லப்படும்.

மேல்உணர்த்தியமடங்காநீரை வேறொருவகையால் எடுத்துணர்த்தி பழங்குழிகளும் ஓடையும் உணர்த்துமென்றறிய

கண்டங்களிலே சந்திரனாவது சுக்கிரனாவது நிற்கினும், அவற்றைநோக்கினும், மடங்காநீர் உண்டென்றும் இந்திரதனுசு, பரிவேடம், தூமம், நுட்பம், இவர்கள்நிற்கினும், அவற்றை நோக்கினும், பழம் குழிகளாதல், ஓடையாதல், உண்டென்று சொல்லப்படும்.

உப்புவரி கரைவலிவு நீர்த்தெளிவு இவைகளென

கண்டங்களிலே சூரியன் நிற்கினும் நோக்கினும் உப்புவரியென்றும், பரிவேடம்நிற்கினும் நோக்கினும் கரைவலிவு என்றும், சர்

திரன் சுக்கிரன் இவைகள் நிற்கினும் நோக்கினும் நீர்த்தெளிவுஎன்றும், சந்திரன் சுக்கிரன் அல்லாத மற்றயகோட்கள் நிற்கினும் நோக்கினும் நீர்த்தெளிவு இன்மையென்றுஞ் சொல்லபபடும்.

வெள்ளுவரி கரையழிவு இடையூற்று கீழ்மோளை இவைகளென்றறிய

கண்டங்களிலே அங்காரகன் நிற்கினும் நோக்கினும் வெள் உவரியென்றும், புதன் நிற்கினும் நோக்கினும் கரையழிவு என்றும் அக்கண்டம் மிதுனம் கன்னி சிம்மம் இவைகளாகில் இடையூற்று என்றும் கீழ்மோளையென்றுஞ் சொல்லப்படும்.

பெருநீர் மோளை கல் எலும்பு இவைகளென்றறிய

கண்டங்களிலே சனி பாம்பு இவைகள் நிற்கினும்நோக்கினும் பெருநீர் மோளையென்றும், குரு நிற்கினும் நோக்கினும் எலும்பு உண்டென்றுஞ் சொல்லப்படும்.

கிணற்றின் ஆழக்குறியின்முதற்பங்கில்நீரும் நடுப் பங்கில்நீரும் கடைப்பங்கில் நீரும் உணர்த்தி எட்டுமுழத்திலேநீரும் பாறையடியில்நீரும் திப்பையடியில்நீரும் ஆகிய இவைகளென்றறிய

கிணற்றின் ஆழக்குறிப்பின் சந்திரனுக்கு முதற்பங்கில் நீரும் சந்திரனும் புதனுமல்லாத கோட்களுக்கு நடுப்பங்கில் நீரும், புதனுக்கு கடைப்பங்கில் நீரும், சூரியனுக்கு அ-முழத்தில் நீரும், கன்னியில் நின்ற பாம்பிற்கு பாறையடியில் நீரும், சனிக்குதிப்பையடியில் நீரும் சொல்லப்படும்.

கிணற்றின் ஆழக்குறிப்பறிய

கீழ்நீரை எவ்வெவ்கோட்களால் நியமிக்கப்பட்டனவோ அவ்வவ்கோட்களின் கதிர்களும் மேற்படி கோட்கள் நின்றுள்ளவைஎந் தவிராசிகளோ அந்தந்த இராசிகளின் கதிர்களும் எத்தனையோ அத்தனையும் சாண்களாதலால் சாண்களை முழமாக்கி நின்றதை சாணுக்கொண்டு இத்தனைமுழம் இத்தனைசாண்யென்று கிணற்றினுழவத்தாட்சிகளையும் குறிக்கப்படும்.

கிழ் நீர்வினவின் நிலத்தின்கண் உணர்த்துமெனே.

சூரியனுக்கு காடாம், அங்காரகன் சனி இவர்கட்குமுட்களா ம், பாம்பிற்குத் தாழை புதல் புற்று இவைகளாம், சந்திரனுக்குவா ழையாம், புதனுக்கு பலாவாம், குருவுக்கு தென்னை பனை கமுகு மா இவைகளாம், சுக்கிரனுக்கு கொடிகளாம்.

கிணற்றின் அனுபவம் அறிவது

கீழ்நீர்க்காக இதுவரையிற்கூறிய இடங்களிற் சுபகோட்கள் நட்பாகஷி உச்சக்கோட்களாக நிற்கினும் நோக்கினும் கிணற்றையு டையான் அனுபவிப்பன், பாவக்கோட்கள் பகை நீச்சக்கோளாய் நிற்கினும் அவற்றைநோக்கினும் பிறர்அனுபவிப்பர், மேல்உணர்த் திய இடங்கள் சரவிராசிகளும் உபயவிராசிகளுமாக நிற்கினும்அவ ற்றை நற்பாகஷி உச்சம்பெற்ற சுபககோட்களது நோக்கம் உள்ளவி டத்து உடையான்நன்மைஅடைகுவன் என்றும், கிணற்றைத்தானே அனுபவிப்பன் என்றும், நோக்கமில்லாதவிடத்துதீமைஅடைகுவன் என்றும், கிணற்றைப்பிறர் அனுபவிப்பர் என்றும் சொல்லப்படும்,

கிணறிருக்கும் திசையின்பலனை அறிவது

உடையவன் இருக்கும் ஊருக்கும்மனைக்கும் கிணறனது கிழ க்கு தென்கிழக்கு தெற்காகில் மக்களழிவாம், தென்மேற்காகில் அ டிமைகளுண்டாம், மேற்காகிற் பயிர்கள் நோய்கொள்ளும், வடமே ற்காகிற் குடும்பவிர்த்தியாம், வடக்காகில் தானியவிருத்தியாம்,வட கிழககாகில் தனப்பிராப்தியுண்டாம், பிரமத்தானமாகில் லட்சுமி கடாகூமுண்டாம்.

விரலின் நிலந்தோண்டலின்பலன்

கீழ்நீர்விரலினை அந்நிலந்தைக்கீறிக் காட்டென்றளவிற்சிறு விரலாற்கீறிற் பெண்பேறு உண்டாம், அணிவிரலாற்கீறிற் சம்பத் துண்டாம், நடுவிரலாற்கீறில் தேசசஞ்சாரம்வரும், சுட்டுவிரல்பெ ருவிரல்களாற்கீறில் பொல்லாங்குவிளையும்,

கிணறுவெட்டத்தொடங்கும் மாதங்களின்பலன்.

கிணறெடுக்கமாதங்கள் சித்திரை, வைகாசி, ஆனி இவைகளா கிற் பெருநீருண்டாம் உத்தமமாம், ஆடி, ஆவணி இவைகளாகில்அற்

பதீருண்டாம் மத்திபமாம், மற்றய மாதங்களாகில் தீரின்மையாம் அதமமாம், இப்படியே கோட்களின் அமைவும் உண்டாகுதல் கண்டு உறுதிசொல்லப்படும்.

வீட்டின்சாலை விபரமறிய

ஏற்றுகின்ற ஊரையும், எடுக்கின்ற மனையையும் சஈ-அரையாக்கி நடு நாலரை பிரஸ்தானம் நாலுமூலை நாலரையும்போய் காக்கும். இந்தநான்கில் எட்டரையும் தேவர்கள் காவல்நின்ற சஅ-அரையும் கிழக்குமுதல் ஈசான்ய ஈருய் கிழக்கேசமயல்கட்டு, தென்கிழக்கே பசுத்தொழும், தெற்கே குப்பைதொட்டி, தென்மேற்கு தோப்பு, மேற்குஎருமைத் தொழும், வடமேற்கு நெல்குதிர்,வடக்கு போஜனசாலை, வடகிழக்கு நீர்ச்சாலை கிணறு. இப்படி மனைகளைக் கட்டினால் நற்பூவையாகிய மகாலட்சுமி பொருந்தியிருக்கும்படியான மனைகளாயிருக்கும்.

அவரவர்கள் ஜெனித்தராசிக்கு வாசற்பொருத்தம்

இடபம், மிதுனம், கடகவிராசியிற் செனன மானவர்களுக்கு வடக்குவாயில் வீடும், சிங்கம், கன்னி, துலாம் இந்தராசிகளில்ஜெனனமானவர்களுக்கு கிழக்குவாயில் தெற்குவாயில்வீடும், விருச்சிகம், தனுசு, மகரம் இந்தராசிகளில் ஜெனனமானவர்களுக்கு தெற்குவாயில்வீடும், கும்பம், மீனம், மேஷம் இந்தவிராசிகளிற் ஜெனனமானவர்களுக்கு தெற்குவாயில்வீடும் கட்டினால் சுபங்கள் விசேஷமாக நடக்கும்.

வீட்டுக்குத் தூண்நிறுத்த விவரமறிய

அவரவர்களுக்குண்டாகிய மனையின்நீளத்தை ஒன்பதுபாகஞ் செய்து நடுபாகத்தை மூன்றுகூறுசெய்து இதில் இரண்டுகூறு தெற்கேநீக்கிநின்ற ஒருகூறில் வாஸ்துநாபியென்று தெரிந்து கம்பம் நாட்ட உத்தமம்,

வீட்டுக்கு வாயில்வகுத்த விவரமறிய

மனையின் அகலத்தை கூ-பாகஞ்செய்து இடதுபாகத்தில் ரு-கூறும், வலதுபாகத்தில் ரு-கூறுஞ்செய்து நின்றகூறு ஒன்றில் வாயில்வைக்க உத்தமம்.

கதவுநிலைநிறுத்த விவரமறிய

வீடுகட்டகுறித்த முகூர்த்தங்களிலே சித்திரை வைகாசியிலே வடக்குவாயிலும், ஆடி ஆவணியிலே கிழக்குவாயிலும், ஐப்பசி கார்த்திகையிலே தெற்குவாயிலும், தை மாசியிலே மேற்குவாயிலும் நல்ல சுபமுகூர்த்தங்களிலே நான்கு வாயில்களுக்கும் நிலைநிறுத்த உத்தமம்.

கதவினோசை விவரமறிய

தாள்-க-௩-ரு-மரம் கதவுநிற்க பின்னும் கதவினோசைஎக்காளம்போலும் கழுதையின் ஓசைபோலும் செக்கினோசைபோலும் சப்திக்குமாகில் புத்திரபாக்கியமில்லை, மனையாள் மரணமடைவாள் தீமையைத்தரும், அல்லது தாளத்தின்ஓசைபோலும் யானையின் வோசைபோலும் சப்திக்குமாகில் உத்தமம், கரும்பாலையின் வோசைபோலும் சப்திக்குமாகில் புத்திரவிரோதம் பெண்பழி கொள்ளும் என்பதாம்.

இதுவுமது

திறந்தகதவு தானேமூடிக்கொண்டால் அந்தவீட்டுக்குடையவனுக்கு பிராணபயமுண்டாம். அல்லது சப்தத்தோடு மூடிக்கொண்டால் வாசஞ்செய்ய மனிதரற்று மனைபாழாகும் திறந்தகதவு அசையாமல் நிலையில்நிற்கில் வீட்டிற்குடையவன் குடும்பத்துடன் வாழ்வான் என்பதாம்.

வீட்டின்பக்கத்தில் நிற்கக்கூடியமரங்கள்

தெங்கு-பலா-வாழை-கமுகு-மாதளை-திராட்சி-வேம்பு- எலுமிசம்-முல்லை-மல்லிகை-தாதுமாதுளை-துளசி-கொன்றை-நாவல்- பவளமல்லிகை-மா-நாரத்தை-பன்னீர்ச்செடி இவைகள்முதலாகிய மரங்கள் வீட்டின்பக்கத்தில் நிற்பதுசுபம் என்பதாம்.

வீட்டின்பக்கத்தில் நிற்கக்கூடாதமரங்கள்

புளியமரம். அகத்திமரம்-நெல்லிமரம்-மிளகுமரம்- கூளாமரம்இலுப்பைமரம்-வில்வமரம்- அலரிமரம்-முருங்கைமரம்- வாகைமரம்எரண்டமரம்-மருதமரம்- பருத்திமரம்- பனைமரம்-எட்டிமரம்-காவல்மரம் எருக்குமரம் இவைகள்மனையில் இருக்குமாகில்,தாமரைமலரிலே

வீற்றிருக்கும்படியான இலட்சுமிதேவி வாசஞ்செய்யாமல் மூதேவி யானவள் வாசஞ்செய்து அந்தமனையைக் கெடுக்கும் என்பதாம்.

மாடுமுதலானவைகொள்வல் அல்லதுகொடுத்தல்

திங்கள்-புதன்-வியாழன்-சனிவாரங்களும், துவிதியை-திருதியை-பஞ்சமி-சஷ்டி-சப்தமி-தசமி-ஏகாதசி-துவாதசி - திரயோதசி திதிகளும், அசுவினி-புனர்பூசம்-அஸ்தம்-சுவாதி-விசாகம்கேட்டை அவிட்டம் சதையம்-ரேவதி இந்நக்ஷத்திரங்களும், மேஷம் - மிதுனம்-சிங்கம்-கன்னி-விருச்சிகம்-தனுசு-மகரம்-மீனங்களும், மாடு-ஆடு முதலானவைகள் கொள்ள கொடுக்க பட்டிகூட்ட இதுமுதலாகிய கருமங்களுக்கு உத்தமம்.

இதுவுமது

இன்னும் அசுவினி உத்திரட்டாதிகளிற் குதிரையும், பூராடம் உத்திராடம்-சதையம் இதுகளில்யானையும், அஸ்தம் சுவாதியிற்பசுவும் எருமையும், திருவாதிரையில் உழவுமாடும், கார்த்திகை பூசத்தில் மேஷலக்கினத்தில் ஆடும் கொள்ளவும் கொடுக்கவும்உத்தமம்.

சுவர்பிளப்பு அல்லது புத்துவிவரமறிய

கிழக்கில் சுவர்பிளக்கில் அவ்வீட்டில்வாழ்கின்றவர் நாசமடைவார், தேயுவில் அல்லல்உறுவர், தெற்கில் மரணமடைவார், நிருதியில் அழகுபெறுவர், மேற்கு அர்த்தஆனி, வடமேற்கில் சாவு, வடக்கில் அர்த்தலாபம், ஈசான்யம் ஸ்ரீமரணமென்றுஎட்டுதிக்குகளுக்கும் பலனறிவது.

இன்னம்புத்தெடுக்கில் அகத்தில்நடு, பிரமஸ்தானம்சாவு, கிழக்குசெல்வம், அக்கினிமனைபீடிக்கும், எமன்துக்கம், நிருதிஇலட்சுமிகரம், வருணன் புத்திரலாபம், வாயு சத்துருஉண்டாகும், குபேரன்நன்மை, ஈசானம் வியாதியென்று சொல்லப்படும்.

ஜென்மநக்ஷத்திர மரங்களின்விவரமறிய

அசுவினி-காஞ்சிரம், பரணி-நெல்லி, கார்த்திகை-ஆத்தி, ரோகணி-நாவல், மிருகசிரம்-கருங்காலி, திருவாதிரை-சண்பகம், புனர்பூசம்-புன்னை, பூசம்-ஆல், ஆயில்யம்-பாகை, மகம்-அரசு, பூரம்-விளா, உத்திரம்-பலா, அஸ்தம்-எருக்கு, சித்திரை-மாதளை, சுவாதி-வில்வம், விசாகம்-மருது, அனுஷம்-தாழை-கேட்டை-மகிழ், மூலம்-

மூங்கில்,பூராடம்-தேமா, உத்திராடம்-வஞ்சி,சிருவோணம்-பலாசு அவிட்டம்-வன்னி, சதயம்-கடம்பு,பூரட்டாதி-புளி,உத்திரட்டாதி வேம்பு, ரேவதி-இலுப்பை, இந்த இருபத்தேழுநாளின் பேரானபடியால் தன்நக்ஷத்திரமரங்களை தான்வெட்டச் சொல்லக்கூடாது. அப்படி அல்லவென்றுவெட்டினால் தன்னைவெட்டினதுபோல ஆகும், தன்நக்ஷத்திரங்களைவெட்டாமல் பூசைபண்ணிக்கொண்டுவரவும் சுபம்.

காலற்றநாள், தலையற்றநாள், இடையற்றநாள் முழுநாள், இவைகளின் பலனறிய

கார்த்திகை, உத்திரம், உத்திராடம், காலற்றநாள். மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம், உடலற்றநாள். புனர்பூசம், விசாகம், பூரட்டாதி, தலையற்றநாள். இந்நாட்களில் மனைகோலினும்,வழிநடக்கினும், மரணமாகும். விவாகஞ்செய்யில் அந்தப்பெண்விதவையாவாள். இந்தநாட்களைக்குறித்து கற்றுணர்ந்தபெரியோர்கள் இனி எந்தநூலிலாவது இதற்குச்சமாதானமாகச்சொல்லி இந்தவிதியைத் தவிழ்ந்து நடத்துவராயின் நலமில்லையென மூதோர்சொல்லுவர்ஆதலால் இந்தநாட்களை நீக்கி மற்ற பரணி, அசுவனி, ரோகணி, திருவாதிரை, பூசம், ஆயில்யம், மகம், அஸ்தம், சோதி, அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், சிருவோணம், சதயம, உத்திரட்டாதி, ரேவதி, இப்பதினெட்டுநாளும் முழுநாளாதலால், இந்நாட்களில் அவரவர்களுக்குப் பொருந்தியநாட்களில் மனைகோலல் முதலியசுபகாரியஞ்செய்ய உத்தமம்.

மேல்நோக்குநாள் விவரமறிய

மேல்நோக்குநாளென்னும் ஊர்த்தமுகநக்ஷத்திரங்களாகிய ரோகணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம் அவிட்டம். சதயம், உத்திரட்டாதி, ஆகிய இவ்வொன்பது நக்ஷத்திரங்களிலும் பட்டாபிஷேகம் உத்தியோகம், இராஜதெரிசனம் வியாபாரம் கிரையவிக்கிரையம், ஆபரணம், வாசக்கால், தூண், துவசம், தோப்பு முதலியவைகள்செய்ய விர்த்தியாகும் உத்தமபலன்.

பக்கநோக்குநாள் விவரமறிய

பக்கநோக்குநாளென்னும்திரியங்கமுகநக்ஷத்திரங்களாகியஅசுவனி,மிருகசீரிஷம்,புனர்பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனு

ஷம், கேட்டை, ரேவதியாகிய இவ்வொன்பதுநக்ஷத்திரங்களிலும் பயிர்வைக்க பசு, எருது, எருமை, குதிரை, ஒட்டை, யானைமுதலியதுகள் வாங்கவும், விதைவிதைக்கவும், யாத்திரைமுதலியவைகள் செய்யவிர்த்தியாகும் உத்தமபலன்.

கீழ்நோக்குநாள் விவரமறிய

கீழ்நோக்குநாளென்னும் அதோமுகநக்ஷத்திரங்களாகிய பரணி கார்த்திகை, ஆயிலியம், மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதியாகிய இவ்வொன்பது நக்ஷத்திரங்களிலும் கணக்கு அப்பியாசிக்கவும், கிணறு, குளம், அகழி, ஒடை, களஞ்சியம், செய்விக்கவும் புதையல்போடவும் கிழங்குமுதலானவைகள் நடவும் விர்த்தியாகும் உத்தமபலன்.

குளிகன் அறியவிபரம்

எந்தக்கிழமையில் குளிககாலம்பார்க்கவேண்டுமோ அந்தக்கிழமைமுதலாக சனிக்கிழமைவரையிலும் கணக்கெண்ணிதொகையை வந்த மூன்றேமுக்காலிற் பெருக்கி கண்டதொகையை குளிககாலமாக்கிக்கொண்டு மனைகோல, ஊர்குடிஎற்ற முகூர்த்தக்கால்நாட்ட வாகனங்களேற, தானியங்கள் இருப்புகட்ட மெத்தவும் உத்தமமாகும் என்பதாம்.

ஒரு முகூர்த்தம்வைத்து சோமவாரத்திலுதையத்தில் கால்நாட்டி புதவாரமுதையத்தில் கைவளையல்கள் முதலானதுகளைப்பூட்டி வெள்ளிக்கிழமையுதயத்தில் ஒடியாத்திவியாழக்கிழமைஉதயத்தில் குடிபுகுந்தால் சத்துருக்களாலே நெருப்பிட்டுக் கொளுத்தினும் அந்தவீடுவெந்துபோகாது அந்தவீட்டில் குடியிருப்பவர்கள் இந்திரனைப்போல சகலபோக்கியங்களையும் அடைவார்கள் என்பதாம்,

லக்கினத்தியாச்சிய விவரமறிய

மேஷம், ரிஷபம், கன்னி, தனுசு, முதலில் அரைநாழிகையும் கடகம், விருச்சிகம், மகரம், மீனம், அந்தத்தில் அரைநாழிகையும் மிதுனம், சிங்கம், துலாம், கும்பம், மத்தியில் அரைநாழிகையும் தியாச்சியமாம், அந்ததியாச்சியவேளைகளில் யாதொரு சுபகாரியமுஞ் செய்யலாகாது என்பதாம்.

சிவமயம்.

தேவாலயச் சிற்பம்.

திவ்விய தளவிமானஞ்செய்கிறதற்கு

கௌவடியங்கொள்ள விபரம்.

கிராமத்துக்கும் பிரபுவுக்கும் ஆயாதியில்பொருந்தினபிரஸ்தாரகக்காலப்பிரவாய் அகலத்தை ஆறுகூறுசெய்து கனக்கூடுபங்கு-௧ அகாரைப்பங்கு-௪, கர்ணக்கூடு பங்கு-௧, ஆகபங்கு ௬-ம் சரி.

அகலம்கண்ட நீளம் வாசனமுதல் பிரகாரமட்ட வுயரங்கொள்வது. கல்காரவுயரத்தைப் பனிரண்டு கூறுசெய்து அதிஷ்டானங்கூறு-௩. கால் உயரங்கூறு-௬, பிரஸ்தாரங்கூறு-௩, ஆககூறு ௧௨-ம் சரி.

அதிஷ்டானஉயரத்தை இருபத்துநான்குகூறுசெய்து ஜெகதி கூறு-௮, குமுதகங்கூறு-௮. பட்டியல்கூறு-௮, ஆககூறு -௨௪ம்சரி

காலுயரத்தையெடுத்து எழுகூறுசெய்து ஒருபங்கு வேதியனுயரங்கொள்வது.

காலுயரத்தை மூன்றுகூறுசெய்து இருகூறுபெருங்கால்சமன்மட்டம். மேலொருகூறு தாடி குடம் பலகை வீரகண்ட போதியல்மட்டம். இந்தஒருகூறையும் இருபத்துநான்கு கூறுசெய்து தாடிகூறு-௨, வயிறங்கம்கூறு-௧, குடம்கூறு-௪, வயிறங்கம்கூறு - ௧ பலகைகூறு ௬, வீரகண்டம் கூறு ௫, போதியல்கூறு-௫, ஆககூறு ௨௪-ம் சரி.

சிறுகால்அகாரச்சாலை அந்திரைக்கால்கள்விபரம்.

காலுயரத்தை இருபங்குபண்ணி ஒருபங்கு சிறுகால் கால்சமன்மட்டம், மேலொருபங்கை இருபத்துமூன்று கூறுசெய்துதாடி-குடம்பலகை கூறு-௭, வீரகண்டம் கூறு-௪, சித்து உத்தரம் கூறு-௧, கபோதகம் கூறு-௪, வியாளம் வேதியல் கழுத்துகூறு - ௭, ஆககூறு ௨௩ ம் சரி.

பிரஸ்தாரம் இருபத்தொரு கூறுசெய்து உத்திரம் எழுதகம் கூறு-அ, கபோதகம்கூறு-எ, வியாளம்கூறு-சு, ஆககூறு உக - ம் சரி.

செங்கல்வேலைக்கு கால்பிரவாய் அகலத்தையெடுத்து ஒன்றுக்கு ஒன்றரையுயரங்கொள்வது. இந்தவுயரத்தை பதினாறுகூறு செய்து கர்னக்கூடுமட்டம் கூறு-ரு, பிரஸ்தாரங்கூறு-உ, வேதியல் கூறு-க, கழுத்துக்கூறு-உ, பண்டிகைக்கூறு ச½ ஸ்தூபி-க½, கஆ· கூறு-கசு ம் சரி.

கர்னக்கூடு உயரத்தை ஒன்பதுகூறுசெய்து வேதியல்கூறு-க காலுயரங்கூறு-க½, தாடி குடம் பலகை வீரகண்டம் கூறு-க, உத்திரம் கபோதகம் வியாளம்கூறு-க½ வேதியல்கழுத்து சித்து உத்திரம்கூறு-க¼, தூக்கோடு பண்டிகை பலகை கூறு-உ¾, ஆக-கூறு கூ·ம் சரி.

பிரஸ்தாரவுயரத்தை இருபதொரு கூறுசெய்து உத்திரங் கூறு-அ, கபோதகம்கூறு-எ, வியாளம்கூறு-சு ஆக கூறு-உகம் சரி.

வேதியலுயரத்தை எழுகூறுசெய்து கண்டம்கூறு-ங, கம்பு கூறு-க, எழுதகம் கூறு-க, தலையிடை கூறு-க, மேற்கம்பு கூறு-க ஆககூறு எ·ம் சரி.

கழுத்துயரத்தையெடுத்து இருகூறுசெய்து ஒருகூறு காலுயரம், ஒருகூறு உத்திரம் கம்பு தலைமேல்மட்டம் சரி.

பண்டிகையுயரத்தைப்பத்துகூறுசெய்துதூக்கோடுகூறு-க, கையுருவிக்கூறு-½, கவுந்தபற்பம் கூறு-½ பண்டிகைகூறு-ரு, மாலைக்கட்டு கூறு-¼ பலகைகூறு-¾ மகாபற்பம் கூறு-உ, ஆககூறு-க௦·ம் சரி,

உ

பரமபதி துணை.

விக்கிரகச் சிற்பம்.

பாலகணபதிக்கு

தேங்காய் ஒருகை, மாம்பழம் ஒருகை, வாழைப்பழம் ஒருகை பலாப்பழம் ஒருகை, கரும்பு ஒருகை, மோதகம் ஒருகை, ஆககை ௬ பாலசூரியனைப்போல் வர்னம்.

தனூர் கணபதிக்கு

இடதுகைகளில் ஒருகைபாசம், ஒருகைவிளாம்பழம், ஒருகை நாவற்பழம், வலதுகைகளில் அங்குசம் ஒருகை, எள்ளுருண்டை ஒருகை, மோதகம் ஒருகை, ஆககை ௬, இரத்தவர்னம்.

பக்தி கணபதிக்கு

இடதுகை வாழைப்பழம்-பரமானம், வலதுகை தேங்காய்-வெல்லம், துதிக்கையில் மாம்பழம். வெள்ளைவர்னம்.

வீர கணபதிக்கு

வலதுமேற்கை அங்குசம் கத்தி வேதாளம், ஸ்தூலகணபதிக்குமோதகமும், இடதுகையில் கமண்டலமும், வலதுமேற்கையில் ருத்திராக்கமாலையும் தண்டும் வெள்ளைவர்னம்.

பிங்கள கணபதிக்கு

வலதுகை மேற்கையில் பரசு, கீழ்க்கையில் கொம்பு, இடதுகை மேற்கையில் கருப்பந்தடி, கீழ்க்கையில் மாம்பழம், துதிக்கையில் மோதகம், குங்குமவர்னம்.

உச்சிட்ட கணபதிக்கு

வலதுகைமேற்கை யில் பானு, கீழ்க்கையில்ருத்திராக்கம், இடதுகைமேற்கையில் வில்லும், கீழ்க்கையில் நெற்கதிரும், துதிக்கையை யோனிக்குள்வைத்து வல்லபையை மடியில்வைத்து இருப்பது வல்லபைக்கு வலதுகையில் தாமரைப்புஷ்பம் எடுத்துதொடையில் போட்டது, (விக்கினேஸ்பரனுக்கு) வலதுகையில் அங்குசம்தந்தம் இடதுகையில் பாசம் வாள் இரத்தவர்னம்.

க்ஷிப்ர கணபதிக்கு

வலதுகைமேற்கை அங்குசம், கீழ்க்கை தந்தம், இடதுகைமே ற்கை பாசம், கீழ்க்கைகட்கம், துதிக்கையில்கலசம்,குங்குமவர்ணம்.

ஏரம்ப கணபதிக்கு

ஐந்துமுகம், வலதுகைகளில் அங்குசம்-அட்சமாலை- பாசம்- கொம்பு-அபயம், இடதுகைகளில் பாசம்-ரத்தினகலசம்- திரிசூலம் தாமரைப்பூ-வரதம்வந்தினது-சிங்கவாகனம் பத்துக்கைகள், வெள் ளைவர்னம்.

லட்சுமிகணபதிக்கு

வலதுமேற்கையில் அங்குசம்-மாதுளம்பழம்-பாணம்-சூலம்அ ம்மனையணைத்தகையொன்று, இடதுமேற்கையில் பாசம்-இரத்தின கலசம்-தாமரைப்பூ-வில்-வல்லபையை மடியில்வைத்து அணைத்த கையொன்று, ஆககைகள் ௧௦, வலதுபுரம் இலட்சுமி, ஒருகைதாம ரைப்பூவும், ஒருகைவரதமும், இடதுபுரம்வல்லபை, ஒருகை அபய மேந்தினதும், இரத்தினவர்னம்.

மகா கணபதிக்கு

வலதுமேற்கையில் அங்குசம்-அம்பு-தண்டு-சக்கரம்- மாதுளம் பழம்-கொம்பு, இடதுமேற்கையில் பாசம்-வில்-தாமரைப்பூ -இரத் தினகலசம்-நெற்கதிர்-வல்லபையை அணைத்தகையொன்று, துதிக் கையுடன் பதிமூன்றுகைகள், வெள்ளைவர்னம்.

புவன கணபதிக்கு

வலதுமேற்கை சக்கரம்-புஷ்பபாணம்-அங்குசம்-கொம்பு,இட துமேற்கை சங்கு-கரும்புவில்லு-பாசம்-கண்டகோடாலி, இரத்தின வர்னம்.

நிர்த்தன கணபதிக்கு

வலதுகையில் அங்குசமும் தந்தமும், இடதுகையில் பாசமும் கோடாலியும், துதிக்கையில் பணியாரம்.

ஞானசத்திதாருக்கு

வலதுகையில் சத்தி, இடதுகையில்வச்சிராயுதம்,முகம்ஒன்று இரத்தினவர்னம்.

தண்டாயுதபாணிக்கு

வலதுகை தடியூன்றிநிற்றல், இடதுகை தொங்கவிட்டுத்தொடையைத்தொடப்பட்டது, உச்சிதமாய்நின்றவர் கோவணங்கட்டல், ருத்திராக்கமாலை இரத்தினவர்னம்.

சேனாதிபதி ஆறுமுகத்துக்கு

விசித்திரமான ரத்தினவர்னம், வலதுமேற்கையில் சத்தி-கத்தி-அங்குசம்-பாணம்-தண்டு-அபயமும், இடதுமேற்கையில்வச்சிராயுதம், கேடகம், பாசம், சேவற்கொடி, தாமரைப்பூ வரதமுமேந்தினது.

சுப்பிரமணியருக்கு

ஒருமுகம் நாலுகை தங்கவர்னமுடையவர், அதில்வாகனம்-உ நேத்திரமும் வலதுமேற்கையில் சத்தி தனதுகையில் அபயம், இடதுமேற்கையில் சேவற்கொடி தனதுகையில் வரதமேந்தினது, குங்குமவர்னம்.

சரவணோற்பவருக்கு

ஆறுமுகமும் பன்னிருகரமும் பன்னிருகண்ணுமுடையவர்வலதுமேற்கை, சத்தி, பாணம், சேவற்கொடி, தண்டு, கத்தி, அபயமேந்தினது. இடதுமேற்கை, வச்சிராயுதம், வில்லு, மணி, தாமரைப்பூ கேடயம் வரதமேந்தினது.

குமாரருக்கு

வலதுமேற்கை கத்தி தாமரைப்பூ, இடதுமேற்கை கேடயம் சேவற்கொடி.

சண்முகனுக்கு

வலதுமேற்கையில் சத்தி, பாணம், சேவற்கொடி, தண்டுகத்தி அபயம், இடதுமேற்கையில் வச்சிராயுதம், வில்லு, தாமரைப்பூ, சூலாயுதம், கேடயம், வரதம், வடக்குமுகமாக வாகனம், மயில்இரத்தவர்னம்.

தாருகாரியானுக்கு

ஆறுமுகமும் பன்னிருகரமுமுடையவர் வலதுமேற்கையில், பாணம், அங்குசம், சேவற்கொடி, கத்தி, உலக்கை, அபயமும், இடதுமேற்கையில், வில்லு பாசம், தாமரைப்பூ, கேடயம், சத்திவரதமுமேந்தியது.

பத்திரகாளிக்கு

நாலுகையும் மூன்றுநேத்திரமும் பாம்பினாலே ஆபரணமும் சிரசி லக்கினிச்சுவாலையும் மகிடாசூரனைக் காலிலேபோட்டு உதைத்துச் சூலத்தினாற் குத்தினபாவனையாகவும் வலதுகையிற் சூலமும பக்கக்கையிற் பாசமும், இடதுகையிற் கபாலமும் பக்கக்கையில் டமரகமுமேந்தியது.

விக்கிரகஞ்செய்ய லக்ஷணம்.

சிலாவினாலும், தாம்பிரத்தினாலும், சுதையினாலும், சித்திரத்தினாலும், தந்தத்தினாலும், மரத்தினாலும், விக்கிரகஞ் செய்யப்பட்ட லட்சணத்தைச் சொல்லுகிறோம்.

பாதாதி யுச்சிபரியந்தம் பொருந்தியவுயரத்தை ௧௨0-கூறுசெய்து அடியிற்கண்டவாறு பங்கிட்டுக்கொள்ளவும்.

லாடங் கூறு	௪	மெட்டிரங்கூறு	௧௩
முகங் கூறு	௧௩	உள்ளல் கூறு	௨௫
கண்டங் கூறு	௪	சரணங் கூறு	௪
இருதயங் கூறு	௧௩	சங்கங் கூறு	௨௫
நாபிகூறு	௧௩	நாலிகை கூறு	௪

ஆககூறு ௧௨0 ம் சரி

முகப்பரப்பு கூறு ௧௩, கழுத்துப்பரப்பு கூறு-௧0, வாகுபரப்பு கூறு ௩௯, தேயப்பரப்பு கூறு-௨0, வயிறுபரப்பு கூறு ௪௩, கடிகைபரப்பு கூறு ௨௬, உறப்பரப்புகூறு ௧௩, சாலுபரப்புகூறு ௭, சங்கைபரப்பு கூறு ௬, கொண்டைபரப்பு கூறு ௪.

விக்கிரகத்தினுடைய அங்கமானங்கண்டதை ௧௨௪பங்குபண்ணி யதில் ஒருபங்கு அங்குலமென்றறியவும், அந்த அங்குலத்தை எட்டுப்பங்கு பண்ணில் ஒருபங்கு ஒருயவையென்றறியவும், இந்த அங்குலத்தினாலும், யவையினாலும், விக்கிரகத்தினுடைய உயரத்தையும், அகலத்தையும் சுற்றளவையுஞ் சொல்லுகிறோம்.

லாடம்பங்கு ௪, யவைபங்கு ௩, லாடத்தைப்பற்றி நெற்றிப் பிறையேந்தி மட்டாக்கி பங்கு ௪, யவைபங்கு ௩, நெற்றிப்பிறை யந்தத்தைப்பற்றிப் புடாந்தனம் அளவுபங்கு ௪, யவைபங்கு ௩, புடாந்தத்தில் நின்று அனலாந்தம் மட்டாக்கி பங்கு ௪, யவை ௩, அனலாந்தத்தைப்பற்றிக் கீழ்ப்புடை பங்கு ௧, கழுத்துப்பங்கு ௩,

யவை பங்கு 7, இரக்காசூத்திரத்தில் நின்று இருதயம் மட்டாக்கி பங்கு 13, யவை 3, இருதயத்தில்நின்று நாமம் மட்டாக்கி பங்கு 13, யவை-3, மேஷ்டிரமூலத்தைப்பற்றித் தொடைநீளம் பங்கு-27, முழங்கால்பங்கு-4, முழங்காலைப்பற்றிக் கணைக்கால்வரை பங்கு 27, பாதம்பங்கு4, இது விக்கிரகத்தினுடைய அங்கமான வுயரத்துக்குச் சொன்னோம்.

அங்குஷ்டபாணிபரியந்தம்நீளம்பங்கு - 17, இரக்காசூஸ்திரத்தைப்பற்றி முழங்கைமட்டாக்கி பங்கு-27, முழங்கை பங்கு 2 முழங்கையில்நின்று மணிப்பந்தம் மட்டாக்கி பங்கு 21, மணிப்பந்தத்தில் நின்று மத்திபமங்குலி அங்குசமட்டாக்கி கைத்தலங்கீழ்ப் பங்கு கஅ_உ, முகத்தில்விஸ்தாரம பங்கு 12. கழுத்துவிஸ்தாரம்பங்கு 9, இரண்டுவாகு நடுவிஸ்தாரம் பங்கு 41, இரண்டுஸ்தன்யத்துக்குக்கீழ் விஸ்தாரம் பங்கு 21, அதன்கீழ் மத்திய வுதரவிஸ்தாரம் பங்கு 16, நாபி அருதக்குவிஸ்தாரம் பங்கு 21, அதன்கீழ் ரோணி விஸ்தாரம்பங்கு 13½, தொடைநடுவிஸ்தாரம் பங்கு 12, சிறுதொடைவிஸ்தாரம் பங்கு 8, முழங்காலுக்கீழ் விஸ்தாரம் பங்கு 6½ நடுக்கை விஸ்தாரம் பங்கு 4½, காட்டு விஸ்தாரம் பங்கு 5, பெருவிரல்நீளம் பங்கு 4. பாதம் பங்கு 4½, காட்டுவிஸ்தாரம் பங்கு 5 விசாலவிஸ்தாரப்பரப்பு பங்கு 6½, காட்டில் அருகுபொத்தவிஸ்தாரம் பங்கு 2, யவை 1, நகவிஸ்தாரம் பங்கு 1, நகத்தில் ஆயாமம் பங்கு 1 யவை 1, நீண்டவிருத்தமாகப் பண்ணுவான். காலிற் பாததற்சனி விரல் நீளம் பங்கு 4, யவை 3, மத்திப மங்குலி விரல் நீளம் கடிகை விஸ்தாரம் பங்கு 21, அடித்தொடரம் பங்கு 3 யவை 8 அனுமிகைவிரல்நீளம் பங்கு 3, யவை 1, கனிஷ்டிகைவிரல் நீளம் பங்கு 2½, நகவிஸ்தாரம் பங்கு முன்சொன்னபடியே அந்த விரல் விஸ்தாரத்தைப்பற்றியது, வாகுமத்திபத்தில் விஸ்தாரம் பங்கு 8௨, முழங்கைவிஸ்தாரம் பங்கு 7, முழங்கைக்குக் கீழ், முழங்கைவிஸ்தாரம் பங்கு 6, மணிப்பந்தம் விஸ்தாரம் பங்கு 4½, மணிப்பந்தத்தின்மேல் உள்ளங்கைநீளம் பங்கு 7, நடுவிரல் நீளம் பங்கு 6½, தற்சனி விரல்நீளம் பங்கு 6, அனுமிகைவிரல் நீளம் பங்கு 6½, கனிஷ்டிகை விரலநீளம் பங்கு 4, அங்குஷ்டவிரல்நீளம் பங்கு-4.

கையில் பெருவிரல் விஸ்தாரம் பங்கு-1, யவை-2, தற்சனி விரல்விஸ்தாரம் பங்கு-1, யவை-1, அனுமிகை விரல்விஸ்தாரம்-பங்கு-1, கனிஷ்டிகைவிரல்விஸ்தாரம், யவை6, விரலுயரத்தை ஆறு

கூறுசெய்து அதில் ஒருகூறு நகஞ்செய்வான், இந்தக்கைவிரல் உயரம் 4-செய்யவும், மொழிக்குப்பங்கு-2, யவை-5, கனிஷ்டிகை விரல்மொழிக்கு மேல்பங்கு-உ, யவை-௬, முதல்மொழிக்கும் மணிபந்தத்துக்கும் நடுவாக மொழிசெய்யவும்

உள்ளங்கை அடிவிஸ்தாரம் பங்கு-6½, அங்குஷ்டவிரலுக்கும் தர்ச்சனிவிரலுக்கும் நடுவெளிநீளம் பங்கு-3½, அங்குஷ்ட அடிவிரலுக்கும் மனிப்பந்தத்துக்கும் நடுவெளிக் குளிமாறுபோலே பங்கு-4 மணிப்பந்தத்துக்கும் அஸ்ததலம் பங்கு-2½, கனிஷ்டிகை நீளம் பங்கு-1, விரலடியிலே மாங்கிஷம் பூராவாய் 2-பங்கு காணச்செய்வான், பெருவிரல் குளிமாறுபோலே இருக்கிறயிடம் பங்கு-2,(உள்ளங்கையிலே சங்குபோலவும், சக்கரம்போலவும், திரிசூலம்போலவும், பதுமம்போலவும், குசலத்தொடர்போலவும் கையிலே ரேகையாய் அஸ்தம் செய்வான்.) காதுக்குப்பங்கு முப்பத்திரண்டுஇரண்டுகொதுக்குமுன் விருத்தம் முன்பங்கு-22, ரெண்டுகாதுக்குபின் விருத்தம் பங்கு-கஉ, காதுக்கு விஸ்தாரம் பங்கு-2.

நேத்திராந்தத்தில் காணந்தம் பங்கு-க, நடுநெற்றியிலிருந்துகாதுக்குப் பங்கு-௬, கேசாந்தத்துக்கும் நேத்திராந்தத்துக்கும் புருவஞ்செய்யவும், புருவமட்டத்திற் காதுசெய்யவும், புருவமட்டத்துக்கும் காது அரைப்பங்குஎத்தியும் குறைச்தும் செய்யலாம். புருவணிவிஸ்தாரம் அளவு-க. புருவம் சிங்காரம்போலவும் இளம்பிறைபோலவும் செய்யலாம். அடிப்புருவம் விஸ்தாரம் பங்கு-½ கண்புருவநீளம்-ரு கண்ணுக்குள்ளே சுவேதமண்டலம் பாரிசம்பங்கு-க, யவை-க கிருஷ்ணமண்டலம் யவை-௬. சோதிமண்டலம் யவை - க, ஒருயவையைப் பங்குபண்ணி யதிலொருபங்கு சூட மண்டலஞ் செய்யலாம் கண்ணின்நீளம் பங்கு-௬. கண்விஸ்தாரம் யவை-௬. கண்ணுக்குள் ரெத்தமண்டலம் யவை-க½, கண்ணுக்கு மேல்நீளம் யவை-உ¾ கண்ணிமைக்கும் புருவத்துக்கும் பங்கு யவை-௬, மூக்கு யவைபாரிசம் கழுத்துப்பங்கு-உ. யவை பங்கு-உ, முகபடாந்தத்தைப்பற்றி நடுமூக்கு விஸ்தாரஞ்செய்யவும், நடுமூக்கைப்பற்றி யடிமுக்குச்செய்யவும். கோசுமூலத்திலிருந்து மூக்குசரம் பங்கு-உ, மூக்குரந்திரம் விஸ்தாரம் யவை-எ½, ரந்திரத்தின் இரண்டுவிஸ்தாரம் யவை-ரு மூக்கின்அகலம் எள்ளுப்பூப்போலே செய்யலாம் மூக்குப்படாந்தம் எள்ளுப்பூவில் மாச்சக்கொட்டையைப் பிளந்து ஒட்டிவைப்போலேயிருக்கவும். மூக்குப்பிடைஉயரம் பங்கு-க, மூக்கு நுனிவிஸ்தாரம் யவை-உ, மூக்குநுனியவை-க, தலம்பிதமாகச் செய்வான்.

ரோசிகீளம் யவை-௪$\frac{1}{2}$, ரோசியுபரத்தில் பாதிரோசிவிஸ்தார மேல் வாயுதடுகீளம் பங்கு-௪, யவை-௨, மேலுதடுவிஸ்தாரம் யவை ௧0 துனியவை-௬, நுனிவாயாய்ப்பண்ணுவான்,

உதடு வுயரம் யவை-௧0, உதடுக்குள்ளே யவை-௨, உதடுக்குள்ளே தாழ்த்திய யவை-௩, முன்மேல்வாய்ப்பரப்புபங்கு-௩, விஸ்தாரம்செய்யலாம். விஸ்தாரம் பங்கு-௧, யவை-௨, கேளம்பிற்பாடு பங்கு ௨-செய்வான். கடைக்கண்ணிலிருந்து காதுக்கு நடுவணி பங்கு-௭, காதுகீளம் பங்கு ௭-யென்பது.

விமானஞ்செய்கிறதற்குவிபரம்

கிராமத்துக்கும் சுவாமிக்கும் பிரபுவுக்கும் ஆயாதியில்பொருந்தின பிரஸ்தாரத்தை யிரட்டித்து இருபத்தெட்டுப் பாகஞ்செய்து அதிஷ்டானங் கூறு-௩, பாதவர்க்கங்கூறு-௬, பிரஸ்தாரங்கூறு-௩ கர்ணக்கூறு-௫, பிரஸ்தாரங் கூறு-௨, கழுத்துக்கூறு-௩, பண்டிகை கூறு-௪$\frac{1}{2}$, ஸ்தூபி கூறு ௧$\frac{1}{2}$, ஆக பாகம் ௨௮-ம் சரி.

அதிஷ்டான முயரமெடுத்து இருபது கூறுசெய்து பாதவர்க்கக்கூறு-௫, செகதி கூறு-௫, குமுதகம் கூறு-௫, பட்டியல்கூறு-௫, ஆக கூறு-௨0ம் சரி.

பாதவர்க்கம் உன்னிதமெடுத்து எழுகூறு செய்து கணைக் கூறு-௨, கம்பிக்கூறு-$\frac{1}{2}$. முனைக்கூறு-௧$\frac{1}{2}$ மாரக்கூறு-௨, மேற்கம்பிக் கூறு-௧, ஆக கூறு ௭-ம் சரி.

செகதியுன்னித மெடுத்து எழுகூறுசெய்து செகதி கூறு-௫, பிள்ளைபற்பம் கூறு-௧, மேல் கம்புக்கூறு-௧, ஆக கூறு ௭-ம் சரி.

குமுதகம் உன்னிதமெடுத்து பதினொருகூறுசெய்து கீழ்க்கம்பு கூறு-௧, பற்பம் கூறு-௧. குமுதகம் கூறு-௭, மேல்பற்பம் கூறு ௧, கம்பு கூறு-௧, ஆக கூறு ௧௧-ம் சரி.

பட்டியல் உன்னிதமெடுத்து ஒன்பது கூறுசெய்து கண்டங் கூறு-௪, கம்பு கூறு-௧, மழை கூறு-௩, கம்பு கூறு-௧, ஆக கூறு ௯-ம் சரி.

பாதவர்க்கம் உன்னிதமெடுத்து எழுகூறுசெய்து வேதியல் கூறு-௧, வேதியல் உன்னிதமெடுத்து ஒன்பது கூறுசெய்து கண்டங் கூறு-௪, கீழ்க்கம்பு கூறு-௧, மார் கூறு-௧$\frac{1}{2}$, தலைபிடை கூறு-௧$\frac{1}{2}$, மேற்கம்பு கூறு-௧, ஆக கூறு ௯-ம் சரி,

பாதவர்க்கம் உன்னிதமெடுத்து மூன்று கூறுசெய்து காலுயரங் கூறு-௨, அடுக்குசரங் கூறு-௧, ஆக கூறு ௩-ம் சரி.

அடுக்கு உன்னிதமெடுத்துப் பத்தொன்பது கூறுசெய்துதாடி கூறு-2, குடங் கூறு-4, பலகை கூறு-5, வீரகண்டங்கூறு-3, போதியல் கூறு-5, ஆக கூறு 19-ம் சரி.

தாடியுன்னிதமெடுத்து ஐந்துகூறுசெய்து கீழ்கம்பு கூறு-1, மார் கூறு-2, தலையிடைக் கூறு-2, ஆக கூறு 5-ம் சரி.

குடம் உன்னிதமெடுத்து ஏழுகூறுசெய்து கீழ்க்கம்பு கூறு-1, குடம் கூறு-௬, ஆக கூறு 7-ம் சரி.

பலகை யுன்னிதமெடுத்து நான்குகூறுசெய்து மார்கூறு-1½, மழை கூறு-½, தலையிடைக் கூறு-௨, ஆக கூறு ௪-ம் சரி.

விரற்கண்டம் போதியல் உன்னிதமெடுத்து எட்டுக்கூறுசெய்து போதியல் கூறு-௫, வீரகண்டம் கூறு-௩, ஆக கூறு ௮-ம் சரி

பிரஸ்தானம் உன்னிதமெடுத்து இருபத்துமூன்றுகூறுசெய்து உத்தரங் கூறு-௪, எழுதகம் கூறு-௫, கபோதகம் கூறு-௧0, யாளம் கூறு-௪, ஆக கூறு ௨௩-ம் சரி,

உத்தரம் எழுதகம் உன்னிதமெடுத்து ஐந்துகூறுசெய்து கம்பு கூறு-௧, மார் கூறு-௨, தலையிடைக் கூறு-௨, ஆக கூறு ௫-ம் சரி.

கபோதகம் உன்னிதமெடுத்துப் பதினொருகூறு செய்து அடித்தொங்கல் கூறு ௨, அனுக்கம்பிக்கூறு ௧, கபோதகம்கூறு-௮, ஆக கூறு ௧௧-ம் சரி.

யாளம் உன்னிதமெடுத்து ஒன்பது கூறுசெய்துவேதியல்கால் சாங்கூறு-௪, பிரஸ்தாரம் கூறு-௧, கழுத்துக் கூறு-½, பண்டிகை கூறு-௨, பற்பம் கூறு-௧, ஸ்தூபி கூறு-½, ஆக கூறு ௯-ம் சரி.

கெற்பகிரகத்தின்விபரம்.

ஒருமுழம் முதல் ஐந்துமுழம்வரையில் ஏகதளவிமான கெற்பகிரகம், கிராமத்துக்கும்-சுவாமிக்கும்- பிரபுவுக்கும்-ராஜாவுக்கும்-கர்த்தாவுக்கும் பொருந்தின ஆயாதிப்பிரமாணஞ்செய்யவும்,

நேமுகமான முழம் மூலப்பிரசாதமென்று பேராம். ஆயாதிப் பொருத்தம் வானப்பிரவாய்க் சுற்றுமுழுத்தைக் குழிமாறிக் கண்டதுகையை ஆயாதி பொருந்தும்படியாய் ஒரு நிதானமாக இத்தனை முழமென்றறிந்து அதற்கு வானப்பிரவாய்க்குக் கால்பிரவாய் பாரிசத்துக்குக் கால்முழம் சாண்கழிவுபோட்டு கால்பிரவாய்க் கலத்தை யிரட்டித்து முழத்தை யெட்டுப்பங்காக்கி யதிலொருபங்கு குறடாம் இரண்டுபங்கு காலுயரம், ஒருபங்கு பிரஸ்தானம், உத்தரம்முதல் யாளமட்டக்கூறு-௧, அதன்மேல் ஏகதளவிமான வேதியல்கூறு-௧, அதன்மேல் உத்தரம்முதல் தூக்கோடு பண்டிகை பலிகை பற்ப மட்டம்வரைக்கும் கூறு-௨, அதன்மேல் அடுக்குச்சரங் கூறு-௧, இது பெரும்பங்கு சரி.

கழுத்து உன்னிதமெடுத்து ஐந்துபாகஞ்செய்து அதை யேழு பாகஞ்செய்து வேதியல் பங்கு-ஒன்று, மேல்நின்ற வுன்னிதமெடுத்துமேல்நின்ற கழுத்துக் கூறுசெய்கிறது.

வேதியலுன்னிதமெடுத்து ஒன்பது கூறுசெய்து கண்டங் கூறு-௪, கீழ்க்கம்பு கூறு-௧, பற்பம் கூறு-ஒன்றரை தலையிடைக்கூறு-ஒன்றரைமேற்கம்பு கூறு-௧, ஆக கூறு ௯-ம் சரி.

பண்டிகை யுன்னிதமெடுத்து ஐந்துகூறுசெய்து பிரஸ்தாரம் கூறு-௧, பண்டிகை கூறு-௩, மேல்மார்க்கட்டு சந்திரனில் பலிகை பற்பம் கூறு-௧, ஆக கூறு ௫-ம் சரி.

பிரஸ்தாரம் உன்னிதமெடுத்து இருபத்தொரு கூறுசெய்து உத்தரம் கூறு-௪, எழுதகம் கூறு-௫, நாக்கோடு கூறு-௮, கவுந்தபற்பம் கூறு-௪, ஆக கூறு ௨௧-ம சரி.

பண்டிகைக்குமேல மாலைமுதல் பலிகைமட்டம்வரைக்கும்உன்னிதமெடுத்து பதினைந்து கூறுசெய்து மாலைக்கட்டுக் கூறு-௨, சந்திரநிலைக் கூறு-௨, பலிகைபற்பம் கூறு-௧௧, ஆக கூறு ௧௫-ம் சரி.

விமானத்தின் உன்னிதமெடுத்து இருபத்தொன்பதுபாகம்செய்து மனைக்கூறு-௨ஒ, முனைக்கூறு-௧, மார்க்கூறு-௨, மேல்க்கம்புக்கூறு-௧, கீழ்க்கூறு-௧, ஆரூடாங்கூறு-௩, கீழ்க்கம்புக்கூறு-ஒ, புடங்கூறு-௧0வ, ஆடேகூறு-இரண்டரை, கீழ்கூறு-¾, ஸ்தூபிகூறு ௪, ஆககூறு ௨௯-ம் சரி.

அனுஷ்டானம் உன்னிதமெடுத்து மூன்று கூறுசெய்து காலப்பிரவாயைத்தொட்டு பஸ்துமமானவரைக்கும் கூறு-௧, இந்த ஒருகூறையும் ஆறுகூறுசெய்து செகதிமுன்வாய்க்கூறு-௩, காலபற்பம் கூறு-௩, செகதியொழுங்கில் எழுதகஞ்செய்கிறது, பலகையொழுங்கில்பலகைசெய்கிறது, பற்பவொழுக்கில் எழுதகஞ்செய்கிறது, பஸ்துமம் பூமம் பூமுனையொழுங்கில் கபோதகஞ்செய்கிறது,

உத்தரவொழுங்கில் சொருதசாலைக் கூறு-½, அகாரைகூறு-௧ கர்னக்கூறு ௧-ம் சரி.

கெற்பகிரகம்

அர்த்தமண்டபம். அந்திராள்மண்டபம். மகாமண்டபம், சோபனமண்டபம், ருத்திரகோபுர மண்டபம். அனுமணி மண்டபம் அனுமணியென்றுபெயர்.

மட்டவேலைக்குசாண்களத்தி விபரம்.

ஒருகால் பரப்புவைத்துக்கொள்கிறது.

கெற்பகிரகம் எவ்வளவோ! - அதை ஒருதிண்டாகவைத்து கோண அர்த்தமண்டபம் ¼ ¾ சாண்வைத்துக்கொள்கிறது.

மகாமண்டபம் க-க½-உ வைத்துச் செய்யவும்.

யாளி மகாமண்டபம் க-க½-உ வைத்துச் செய்யவும்.

மகாமண்டபம் அகலம்போல் சரிசெய்யவும், அல்லது ஒருகால் இரண்டுகோல்நீளங் கூட்டியுள்ளகாலும் விட்டுச்செய்யவும்.

கெற்பகிரகத்தை மூன்றுபத்திஆறுபத்தியாவது செய்யலாம் அர்த்தமண்டப மப்படிச்செய்யலாம், மகாமண்டபத்தை மூன்று பத்தி ஆறுபத்தி பனிரண்டுபத்தியாகவும் செய்யலாம், சாலை மஞ் சம்விட்டுச்செய்யலாம், விமானம்-கெற்பகிரகம் எவ்வளவோ! அந்த வுயரத்துக்கு ஒன்றுக்கொன்று ஏகதளஞ்செய்யவும்,

இவ்வியதளம்-ஒன்றுக்கொன்றரைசெய்யவும் நீராடிமண்டபம் திண்டு க-க½ செய்யவும் கெற்பகிரகம் - அகலங்கண்டதைப்போல வே உயரஞ் சரிசெய்யவும், அல்லது ஒருகாலுயரங்கூட்டிச் செய்ய வும். அர்த்தமண்டபம் அந்திராள்மண்டபம் கெற்பகிரகம்போலவே சரிமண்டபம் மட்டாகச்செய்கிறது, மகாமண்டபம் குமுதகமட்டந் தளவரிசைசெய்யவும், மகாமண்டபம்முதல் தளவரிசைமட்டமாகச் சோபனமணிமண்டபம் தளவரிசைக் குறடுவிட்டுச்செய்யவும், அது முன்னாலே மண்டபஞ்செய்தால் கெற்பகிரகவானமட்டம் தளவரி சைசெய்யவும் கெற்பகிரக படதானவொழுங்கில் வானம்மகாமண் டபம் இரண்டு கால்பரப்புச் செய்யவும்.

பஞ்சவர்ணவேலை மட்டவேலை விபரம்

குமுதகம் குஸ்திரம் மூன்றுகால், மூன்றரைக்கால் பரப்புவை த்துச் செய்யவும் உள்படக்கனத்தைக் கால்முழம் அரைமுழங் கூட் டிச் செய்யவும், படக்கன நீளம் உள்படக் கூட்டிச்செய்யவும்.

துய்யசமயம் உயரங்கொள்ளவிபரம்.

கெற்பகிரகம் ஒருதிண்டாகவைத்து திண்டு க-க½-உ-ரு சரி யாகவைத்துச் செய்யவும், திவியகுறடு அகலம் சுவாமிலாடஞ்செய் யவும், சபைக்குறடு கெற்பகிரக அகலத்தை ரு-ல் க-ல் ௬-ல் க-ல் வைத்துச்செய்யவும், வாசல்கெற்பகிரகத்தை ஒருதிண்டாகவைத்து ரிஷபக்குறடு திண்டு-ரு, திண்டு-எ, திண்டு-கூ, திண்டு-கக, இந்தப் படி செய்யவும், அகலத்துக்குஉள்ளு ¾-க-க¼ அப்பாய்ச்செய்யவும் ருத்திரகோபுரஞ்செய்யத் திண்டு ௬-௯-அ-க௬-க௯-கஅ-உ0-உஉ-உ௬-உ௯-உஅ-ரு0-ருஉ இந்தப் படிக்குச்செய்யவும்.

சர்வார்த்த சிற்பசிந்தாமணி

முற்றிற்று.

மகாம[illegible]யாய, டாக்டர்

ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகலமான புஸ்தகவியாபாரிகளுக்கும் அச்சுக் கூடத்தலைவர்களுக்கும், மற்றும் எல்லோர் களுக்கும் அடியிற் கையொப்பமிட்ட யான் அறிவிப்பது யாதெனில்.

1915ம் ஸ்ரீ ஜூன்மீ 1வ தேதி சென்னை இராயபுரம் வடவண்டை மாதாகோவிலைச்சார்ந்த பிள்ளையார் கோவில் சந்து 3 வது நெம்பர் வீட்டிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ சோதிடம் சும்பிரமண்ணியமுதலியார் தமையனார் ம-ா-ா-ஸ்ரீ சடையப்பமுதலியார் குமாரர் ம-ா-ா-ஸ்ரீ சோதிடம் வீராசாமிமுதலியாரவர்கள் சொந்தத்தில் வசனரூபமாக இயற்றி அச்சிட்டு வெளியிட்டிருந்த சிற்ப சிந்தாமணி யென்னும் புத்தகத்தின் சகல பாத்திதைகளையும் மேற்படியாரிடமிருந்து நான் சுத்த கிரையம் செய்து பெற்றுக்கொண்டபடியால் மேற்படி சிற்ப சிந்தாமணியுடன் இன்னும் அநேக விஷயங்களை வசனரூபமாய் நூதனமாக சேர்த்து சற்வார்த்த சிற்பசிந்தாமணி யென்னும் பெயருடன் அடியில் கையொப்ப மிட்டிருக்கிற என்னால், அச்சிட்டு வெளியிட்டிருக்கிறபடியால் மேற்படிபுத்தகத்தை என்னுடைய அனுமதி யின்றி யாவராயினும் அச்சிட்டாலும், அல்லது மேற்படி புத்தகத்திலிருக்கிற எந்த அம்சங்களையாவது எடுத்து அச்சிட்டாலும் 1867ம் ஸ்ரீ 25 வது ஆக்டின் உட்பிரிவுகளின்படி சகல நஷ்டத்திற்கும் ஜவாப்தாரியாவதுடன் கிருமினலுக்கும் பாத்திய மாவார்களென்பதை இதன் மூலமாய் அறிவித்திருக்கிறேன்.

இப்படிக்கு,

கோ. செல்லப்பமுதலியார்

நெ. 55, நம்மாழ்வார் தெரு,

சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை.

விளம்பரம்:

இதனால் சகல கனதனவான்களுக்கும் வியாபாரகடுக்கும் தெரிவிப்பது யாதெனில் அடியிற்கண்ட புத்தகங்களும் இன்னும் இதரமான பலவித தமிழ் நாவலஸ்களும் தெலுங்கு சமஸ்கிறதம் நூலுக்கு புத்தகங்களும் விலை சகாயமாய் பெற்றுக்கொள்ளலாம்.

திருவாசகவுரை	2	0	0
தெலுங்கில் அனுபோகவைத்தியம் 4 காண்டம்	2	0	0
சர்வார்த்த சிற்பசிந்தாமணி நயம் பதிப்பு	2	0	0
மேற்படி 40 ராத்தல் ரப்புதிக்குகடிதம்	1	8	0
யாப்பருங்கலக்காரிகை புதியபதிப்பு	1	0	0
சங்கீதஸ்வரபூஷணிபுதியபதிப்பு	0	12	0
௸ 2-ம் பாகம்	1	0	0
மாட்டுவாகடம் தனி	0	12	0
அசுவசாஸ்திரம்	0	12	0
இரண்டு ஒருகட்டடம் காலிகோபயிண்டு	1	4	0
பிரதாபமுதலியார் சரித்திரம்	1	0	0
பஞ்சதசப்பிரகரணம்	1	0	0
திருவள்ளுவர் நவரத்தின சிந்தாமணி 800-பாட்டு	1	0	0
சோதிடசில்லரைகோர்வை நயம்பதிப்பு	2	0	0
சோதிட நவகிரகமாலை	0	8	0
சோதிட பாலபாடம்	0	8	0
சாதகரகசியம்	0	12	0
நூதன கலியாணபாட்டு	0	4	0
உ0-கட்டளை ஒன்ருய் சேர்ந்த கட்டளை திரட்டு	0	12	0
தி-அப்பாவுபிள்ளைநன்னெறி அரிசந்திரவிலாசம்	2	0	0
முகியித்தீன் மாலை 126-சயிட்டுள்ள புத்தகம்	0	12	0

மகாமஹோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 60009

இப்படிக்கு

கோ. செல்லப்பமுதலியார்

நெ, 55, நம்மாழ்வார்தெரு,

சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை.